
உ

சிவமயம்



கரணவாய் தெற்கை பிறப்பிடமாகவும்

வதிவிடமாகவும் கொண்ட

# அமரர் கந்தையா சண்முகசுந்தரம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

28.01.2020

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

மாந்தருள் மாணிக்கமாய்
தன்மானத்தின் தலைவனாய்
கட்டுப்பாட்டின் காவலனாய்
பண்புமிகு கணவனாய்
கனிவும் கண்டிப்பும்
நிறைந்த தாத்தாவாய்
அன்புச் சகோதரனாய்
அறிவு மிகுந்த ஆசானாய்
ஒழுக்கம், கடமை,
கண்ணியம், கட்டுப்பாட்டுடன்
குடும்பம் என்ற
பல்கலைக்கழகத்தில்
சிறந்து விளங்கிய எங்கள்
ஐயாவின்
பாதார விந்தத்தில்
இம்மலரை காணிக்கையாகச்
சமர்ப்பிக்கின்றோம்.

இங்ஙனம்

–குடும்பத்தினர்–

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



தோற்றம்
06.11.1936

மறைவு
29.12.2019

அமரர்

# கந்தையா சண்முகசுந்தரம்

## திதி நிர்ணய வெண்பா

ஆண்டு விகாரியில் மார்கழி பூர்வபக்கம்
பூண்ட திதியாம் சதுர்த்தியில் – வான்நாடி
சண்முக சுந்தரமும் சங்கமித்தார் கையிலைவாழ்
புண்ணிய பாதத்தைப் போற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருமுறை அமிர்தம்

## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணுக்கும் மண்ணுக்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

### தேவாரம்

வெந்துயர் தோன்றியோர் வெருவுறினும்
எந்தாய்உன் னடியலால் ஏத்தாதென்நா
ஐந்தலை யரவுகொண் டரைக்கசைத்த
சந்தவெண் பொடியணி சங்கரனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

வான நாடரும் அறியொ ணாதநீ
மறையி லீறும்முன் தொடரோ ணாதநீ
ஏனை நாடரும் தெரியொ ணாதநீ
என்னை இன்னிதாய் ஆண்டு கொண்டவா
ஊனை நாடகம் ஆடு வித்தவா
உருகி நான்உனைப் பருக வைத்தவா
ஞான நாடகம் ஆடு வித்தவா
நைய வையகத் துடைய விச்சையே.

## திருவிசைப்பா

கடையவனேனைக் கருணையினாற் கலந்தாண்டுகொண்ட
விடையவனே விட்டுடுதி கண்டாய் விறல் வேங்கையின்றோல்
உடையவனே மன்னுமுத் தாகோச மங்கைக்கரசே
சடையவனே தளர்ந்தேனெம் பிரானென்னைத் தாங்கிக்கொள்ளே!

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவுபெற் றேன்பெற்ற தார்பெறு வார்உலகில்
ஊரும் உலகும் கழறவுழறி உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

ஊன டைந்த உடம்பின் பிறவியே
தான டைந்த உறுதியைச் சாருமால்
தேன டைந்த மலர்ப்பொழிற் றில்லையுள்
மானடஞ்செய் வரதர்பொற் றாதொழ.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## திருப்புகழ்

கருப்பாற் றூறிப் பிறவாதே
கனக்கப் பாடுற் றுழலாதே
திருப் பொற்பாதத் தநுபூதி
சிறக்கப் பாலித் தருள்வாயே
பரப்பற் றாருக் குரியேனே
பரத்தப் பாலுக் கணியோனே
திருக்கைச் சேவற் கொடியோனே
செகத்திற் சோதிப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழிபடு தெய்வங்களை வேண்டிப் பாடியது

***வைரவர்***

கடுக்காய் மாலைதனை கழுத்தினிலே அணிந்தவனே
கரத்தினிலே சூலமுடன் காரிருள்தனில் உலாவருவாய்
எடுப்பான துணைவன் எமை விட்டு வருகின்றார்
ஏற்பாயே உம் பாதம் எம் ஞான வைரவரே

***வெற்றிகாட்டுப் பிள்ளையார்***

ஒருகொம்பு கரமிருக்க அன்னையுடன் தந்தையுமே
உலகமென சுற்றி வந்து பொருளுரைத்த ஆனைமுகா
வருகின்ற தாத்தாவை விழிசிந்த வையாதே
விநாயகப் பெருமானே வினைதீர்த்து வைப்பாயே

***தென் கருணையூர் முருகப் பெருமான்***

உன்னைத் தொழுகின்ற எம் தந்தை உந்தனையே
உடன்நாடி வந்திட்டார் உறவாய் ஏற்றவரை
என்றும் நீங்காமல் காத்திடுவாய் ஐயா
இங்கிருந்து தொழுகின்றோம் உந்தனை நினைத்து

***கருப்பையடி மனோன்மணி மீனாட்சி அம்மன்***

தேசமெல்லாம் உனை நம்பி தேடி வரும் இங்கு
தாயே! மீனாட்சி அம்மா! தயவோடு நின்னடியை
நேசமுடன் நாடிவந்த நம்மவரை நீயும்
நலமோடு காத்திடம்மா! நாமுன்னைத் தொழுகின்றோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### *செல்வச்சந்நிதி முருகன்*

ஆற்றங்கரைப் பூவரசின் கீழிருந்து அரசு செய் ஆறுமுகா
நோற்றிடுமுன் விரத விழாவெல்லாம் பூண்டேன் கடைவழிக்காய்
போற்றிடுமுன் பதநாடி தனிவழியே துணையின்றி வரும்போது
பற்றிடு கைவேலோடு மயிலேறிக் காப்பதுன் பாரமையா

### *வல்லிபுர ஆழ்வார்*

துள்ளியெழும் பாற்கடல் துவாரகை நாயகா
வல்லிபுர ஆலயத்து வைகுந்தா - உள்ளத்தில்
பூத்த முகுந்தா புவி காக்கும் மாயவா
நீத்தாரைக் காத்துவிடு நீடு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுந்தரச் சுவடுகள்

இயற்கை எழில் ததும்புகின்ற இலங்கைத் திருநாட்டின் சிரசாய் மிளிர்கின்ற யாழ்ப்பாணத்தின் மூளையென வர்ணிக்கப்படுவது வடமராட்சிப் பிரதேசமாகும். தலைமைச் செயலகமான மூளையின் செயலொழுங்குகளுக்குப் பின்புலமாக அமையும் ஹைப்போ தலமஸ் (Hypothalamus) போல கவனக்குவிப்பிற்குரிய ஊராகத் திகழும் கரணவாய் தெற்கிலே கணபதியாரின் மகனான பண்டிதர் கந்தையாவும் வல்லியப்பரின் மகளான சின்னம்மாவும் நிகழ்த்திய இல்லறமான நல்லறத்தின் பயனாக 06.11.1936ல் இரண்டாவது மகனாக சண்முகசுந்தரம் வந்துதித்தார். சகோதரங்களான தணிகாசலம், சண்முகரத்தினம், மனோரஞ்சிதம், இந்திராணி ஆகியோரின் பாசமழையிலே நனைந்தவாறே வளர்ந்தார்.

புலமை நாட்டத்திற்குரிய ஆரம்ப அகவையிலே யா/கரணவாய் மகா வித்தியாலயத்தில் தனது முகிழ்நிலைக் கல்வியினைத் தொடங்கினார். அக் காலத்தில் பாடசாலையில் வழங்கப்பட்ட மதிய உணவில் தனது பங்கினையும் சேர்த்து வள்ளியம்மை (அக்கக்கா) அவர்கள் ஊட்டிவிட்டதான தகவலை அன்னார் அடிக்கடி சிலாகித்துப் பேசுவதுண்டு. இடைநிலைக் கல்வியினை யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியிலும் (1947-1950) யா/இந்துக் கல்லூரியிலும் (1951-1958) கற்றார். யா/இந்துக் கல்லூரி விடுதியில் தங்கியிருந்து கற்றமையினால் இந்துஞான தரிசனம் சித்தியாக, சைவ பாரம்பரியங்களை பின்பற்றி வாழும் போக்கினை இறுதிவரை கைக்கொண்டார்.

க.பொ.த உயர்தரத்தில் முதற் தடவையிலேயே சித்தியெய்தி எமது ஊரிலிருந்து இவரோடு சிவஞானம், தணிகாசலம் உட்பட மேலும் இருவருமாக ஐவர் முதன்முதலாக கொழும்பு பல்கலைக்கழகத்திற்குத் தெரிவானார்கள். தூயகணிதம், பௌதிகம், இரசாயனவியல் ஆகிய பாடங்களைக் கற்று பட்டப்படிப்பினை நிறைவு செய்து 05.09.1960ல் தன்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்த்த தாய் மடிகளில் ஒன்றான யாழ் இந்துக்கல்லூரியில் தனது கன்னிக் கற்பித்தலினைத் தொடங்கினார். தகுநயமான கற்பித்தலின் ஊடாக கல்லூரி சமூகத்தினை தன்வசப்படுத்தினார். இன்றும் அவரது மாணவர்களின் மனதிலே வசீகரமான வரைபடமாக கனதியான கற்பித்தல் அணுகுமுறை மிளிர்வதாக விதந்துரைக்கப்படுகின்றது.

1962ல் மற்றொரு மாதாவின் மடியான உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரிக்கு இடமாற்றம் பெற்றார். இங்கே கற்பித்தல் அடையாளத்தோடு குறுகிவிடாது, ஆளுமையின் அகலித்த கட்டமைப்பில் சாரணியம், உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம் என்பவற்றோடு ஏனைய மெய்வல்லுநர் போட்டிகளிலும் மாணவர்களை விருத்தி பெற ஆற்றுப்படுத்தினார். இத்தகைய போட்டிகளின் செல்நெறிக்குத் தனது பூரண நேரத்தையும் ஒதுக்கி கல்லூரியின் வளர்ச்சியையே ஏக நோக்காக ஏற்றுச் செயற்பட்டார். இத்தகைய உன்னத நுட்பச் செயலொழுங்கின் முன்னெடுப்பால், இக்காலப் பகுதியில் மெய்வல்லுநர் போட்டி நேரக்கணிப்பாளராக முதன்மைச் சித்தியடைந்து உயர் தகைமையாளரானார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அன்பின் நீட்சியின் அடிநாதமாகத் திகழும் இல்லறவாழ்விற்கு வாசற்படியாக வளஞ்சேர்ப்பது திருமணமாகும். தனிநிலை துறந்து இருமனம் கலந்து பெருமகிழ் தருகின்ற திருமண வாழ்வில் 14.11.1966ல் கலந்தார். பாலர் சின்னத்தம்பியும் சிதம்பரி மகள் மாணிக்கமும் பெற்றெடுத்த இரண்டாவது மகளான ஆனந்தமலரைக் கரம்பிடித்து அகமகிழ்வெய்தினார். இணையிலா இல்லறத்துணையால் மனைசிறக்க, 1967ல் அரவிந்தன், 1969ல் முகுந்தன், 1972ல் அபிராமி, 1975ல் இளவேந்தன் என நான்கு வேதங்களைப் போன்ற நன்மக்களைப் பெற்றெடுத்தனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஞ்ஞானப் பாடங்களான பௌதிகம், உயிரியல், இரசாயனவியல் பாடங்களில் மேம்பாட்டினை எய்தும் நோக்கோடு, 1968ல் தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் உருவாக்கப்பட்டது. இதன் கால்கோள் நிலையில் இரசாயனவியலுக்கான ஆரம்பகர்த்தாவாக இவர் உள்வாங்கப்பட்டார். குறித்த துறைக்கான வழிகாட்டி நூல்கள் தயாரிப்பு, வேதியல் பொருள்கள் பகிர்ந்தளிப்பு, அட்டவணை தயாரிப்பு போன்ற பணிகளை சிறப்புற முன்னெடுத்தார். தொண்டைமானாற்று நீரேரியில் நீரில் நிகழும் மாற்றங்கள், உயிரிகளில் நிகழும் மாற்றங்கள் பற்றிய அளவீடுகளைக் கொண்டு இவரால் நடத்தப்பட்ட கருத்தரங்குகளினூடாக மாணவர்கள் பலர் பயன்பெற்றனர். இந் நிறுவனத்தால் நடத்தப்பட்ட பரீட்சைகள் அதிக முக்கியத்துவம் வாய்ந்தனவாகவே அமைந்திருந்தன.

1978ல் யா/இந்துக்கல்லூரி வேதியல் மேதாவளியான ஆசிரியரை மீளவும் சேவையாற்ற அழைத்தது. அக் காலத்தில் ஆசிரியராக மட்டுமன்றி, விடுதிச்சாலை அதிபராகவும் செயலாற்றினார். விளையாட்டுத் துறையின் புத்தெழிச்சிக்கு உறுதுணையானார். இந்துக்கல்லூரி என்ற இதயத்தைப் பாதுகாக்கின்ற இருபத்தைந்தாவது விலா என்பு போலவே எப்போதும் பணிபுரிந்தார்.

இரசாயனவியற் துறையிலே எழிற்கொடி ஏற்றிய அன்னாரின் பன்முக ஆளுமைத்திறனை வியந்த ஹாட்லிக்கல்லூரி 1984ல் அவரைச் சேவையாற்ற வேணவாவோடு விரும்பி அழைத்தது. அங்கே நேர்த்திமிகு சேவையினை வழங்கிக் கொண்டிருந்த தருணத்திலே பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் விரிவுரையாளராகப் பணிபுரியும் வாய்ப்புக் கிட்டியது. சில வருடங்கள் விரிவுரையாளராகப் பணியாற்றிய பின் தனது 55வது வயதிலே 1991ம் ஆண்டு சுயவிருப்பின் அடிப்படையிலே ஓய்வு பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கானகத்து மூங்கிலை வேய்ங்குழலாய் மாற்றும் வித்தகம் மிகுந்த மீயறிகையாளரிடம் கற்கும் வாய்ப்பு தனியார் கல்விப்புலங்களினால் அகலப்படுத்தப்பட்டது. 1961லிருந்து கிட்டத்தட்ட 2008ம் ஆண்டு வரை பல பிரத்தியேக வகுப்புகளாலும், தனியார் கல்வி நிறுவனங்களின் துணையுடனும் திரள் மாணவரைப் ஈர்த்து இரசாயனவியலைக் கற்பித்தார். தற்புதுமையும் மீநுட்பமும் கலந்த நூதனமான கற்பித்தலால் காத்திரமான மாணவக் குழுமத்தினைச் செதுக்கினார். இவரிடம் கற்றவர்களில் பலர் வைத்தியர்களாய், பொறியியலாளர்களாய், நிர்வாக சேவையாளர்களாய், பேராசிரியர்களாய், நிர்வாக சேவையாளர்களாய், ஆசிரியர்களாய் பன்முகப் பதவிகளை அலங்கரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

தனிநபர் விரோதங்களைக் கடந்து அனைவரோடும் நட்போடு பழகும் பக்குவம் மிகுந்ததால், சமூக அக்கறையும் அதிகரித்தே காணப்பட்டது. பிறர்க்கு உதவுவதில் 'ஓ' வகைக் குருதி போல பொது வழங்கியாகவே செயற்பட்டார். சமூக நிறுவனங்களான உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், விபுலானந்தர் சனசமூக நிலையம், தென்கருணையம்பதி முருகன் கோயில், கருப்பையடி மீனாட்சி அம்மன் கோவில் போன்றவற்றிற்கு தலைவராகப் பணிபுரிந்து கனதியான செயல் முன்னெடுப்பிற்கு ஆதாரமாகத் திகழ்ந்தார்.

உடல் ஆரோக்கியத்தில் அக்கறை கொண்டவரான அன்னார், ஆரம்ப காலத்திலிருந்தே விளையாட்டுப் போட்டிகளில் ஈடுபட்டு தேகத்தினைத் திடகாத்திரமாக்கிக் கொண்டார். யாழ் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற பல்வேறு போட்டிகளில் (400m, 800m, உயரம் பாய்தல், தடியூன்றிப் பாய்தல்) சாதனைகளை நிகழ்த்தி வல்லமையை உச்சநிலைக்கு நகர்த்தினார். 1960 மற்றும் 70களில் வேற்று ஊர்களிலுள்ள விளையாட்டுக் குழுமங்களை அழைத்து, தனது ஊரிலே உதைபந்தாட்டம், துடுப்பாட்டம் ஆகியவற்றிலே நட்பு ரீதியான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டிகளை நிகழ்த்திய மகிழ்நெறிச் செயற்பாடுகளின் முற்போக்குச் சிந்தனை மகத்தானது.

ஆழமான அரசியல் தரிசனமும், ஆன்மிக நாட்டமும், நகைச்சுவை உணர்வும் உடைய இவரது சேவையின் சமனான மறுதாக்கத்தினை குடும்பத்தின் எழுகையிலே இனங்காணலாம். காலத்தின் நிகழ்ச்சிநிரலுக்கு அமைவான பிள்ளைகளுக்குத் திருமணங்களை நிறைவேற்றினார். பேரப்பிள்ளைகளோடு குதூகலித்து நிறைவான கொண்டாட்ட மனநிலையோடு மகிழ்வெய்தினார். பிள்ளைகளும் காலத்திற்குக் காலம் வருகை தந்து அவருடன் இன்புற்றுப் பொழுதினைக் கழித்து இறும்பூதடைந்தனர். அகவை மூப்பின் காரணமாக சிறுசிறு நோய்கள் நெருங்கின. எளிமையும் வசீகரமும் மிகுந்த அவரை எமனுக்கும் பிடித்துப் போனதோ என எண்ணும் வகையிலே, 29.12.2019 அன்று நோயின் பூரண தாக்கத்தினால் தனது 84வது வயதிலே மீளாத்துயில் கொண்டார்.

தனிமனித அகமியை மதியுரைகளால் புனிதப்படுத்திய ஆசிரிய தெய்வமாய், வேதியல் அறிவியல் சேகரத்தை பகிர்ந்தளித்த ஈகையாளராய், ஒரே திசையிலே காற்றோட்டம் காணப்படுகின்ற படைமண்டலம் போலக் குறிக்கோளின் நெறியில் பயணித்த பண்பாளராய் திகழ்ந்த அவரது நினைவுகள் கர்ப்பூரமாக காற்றிலே பதங்கமாதலை நிகழ்த்தப்போவதில்லை. அடுத்துவரும் சந்ததிகளின் எழுநூறு மில்லியன் சுவாசச் சிற்றறைகளிலும் நிறைந்திருக்கும். வேறு மூலகங்களோடு தாக்கத்திலே ஈடுபடாத ஆகன் போல விழுமிய வாயுவாக மனத்தடையின்றி மகிழ்வோடு பழகியவரின் வரலாறு சீனச்சுவர் போல நீண்டு செல்லும் வல்லமை மிக்கது. காகிதத்தின் சில பக்கங்களில் அடங்கப் போகாத அற்புதங்களின் சங்கமம் என்ற பெருமைக்குரியது. இத்தகைய புகழின் உறைவிடமான அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வேண்டி எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

-ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் கந்தையா சண்முகசுந்தரம் அவர்களைக் குறித்த இரங்கற்பாக்கள்

### மனைவி ஆனந்தமலர் புலம்பல்

ஆவிகலங்க ஆழ்மனது துடிதுடிக்க
    அழுதவிழி துடைக்கும் கை இருகில் இல்லை
பூவையிழந்தேன் மங்கலநாண் குங்குமத்தை
    பூமியிலே தந்துவிட்டுப் பறித்துச் சென்றீர்
கூடவியற்றும் குரலுமக்குக் கேட்கவில்லை
    கோடியுறவு குழுமியிருந்தென்ன இந்தப்
பாவிமனம் தேடுவது ஐயோ ஐயோ
    பரிதவித்துப் புலம்புகின்றேன் ஐயோ ஐயோ

### ஆண்பிள்ளைகள் முகுந்தன், இளவேந்தன் புலம்பல்

கண்மணி போல் காத்திருந்து கல்வி தந்து
    கடைசி வரை பாசமழை பொழிந்துவிட்டு
விண்ணழைக்க விட்டுவிட்டுச் சென்றதேனோ
    விழியருவி சொரிந்திருக்க விம்முகின்றோம்
துன்பத்தில் அணைத்த கரம் துடிக்க விட்டு
    அகன்றதென்ன அடுத்தெந்தப் பிறவியில் நாங்கள்
அன்பொழுகும் வார்த்தைகளைக் கேட்போம் அப்பா
    ஆவியிங்கு அழுகிறதே ஐயோ ஐயோ

### மகள் அபிராமி புலம்பல்

துக்கத்தில் என்ன சொல்லி அழுவதென்று
    நானறியேன் கண்ணீரில் வெப்பம் சேர
விக்கித்தேன் வேதனைகள் தந்து விட்டு
    விதியழைக்கச் சென்று விட்டீர் மீளாதேசம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கத்தில் அமர்ந்திருந்து பரிவு காட்டி
பல கதைகள் பேசிய என் பாச ஊற்றே
திக்கெட்டும் தேடினால் உங்கள் அன்பை
இனி எனக்குத் தருவது யார் ஐயோ அப்பா

**சகோதரங்கள் புலம்பல்**

ஆறுதலை சொல்லுகின்ற அன்பின் ஊற்றே
அழுவதற்கு காரணமாய் ஆனதென்ன
கூறுதற்கு மொழியின்றி உள்ளம் பொங்கி
குமுறியழும் சோதரங்கள் வார்த்தை கேட்டால்
தேறுதலைச் சொல்வதற்கு யாரும் உண்டோ
தேன்மொழிகள் பேசவொரு வாய்தான் உண்டோ
நூறு உறவு இருந்தாலும் நூலறுந்த
பட்டமாகப் புலம்புகின்றோம் ஐயோ ஐயோ

**மருமக்கள் புலம்பல்**

வான் நாடிச் சென்று விட்ட வசந்தப் பூவே
வலி தந்து பிரிந்து போன கோலம் என்ன?
ஊன்வாடி உயிர்வாடி புலம்புகின்றோம்
உறவுமிகு மாமாவே திரும்பி வாராய்
மீன்கோடி வாழுகின்ற வானை நோக்கி
மிகவேகம் கொண்டு சென்ற மாயம் என்ன?
ஏன்பாடிப் புலம்ப வைத்தீர் எம்மை மாமா
என்றினி நாம் காண்போமோ? ஐயோ ஐயோ

**பேரப்பிள்ளைகள் புலம்பல்**

வாடிநின்று வாய்குழறிப் புலம்புகின்றோம்
வாழவைத்த தெய்வமென்று வணங்குன்றோம்
கோடி முறை நலங்கேட்கும் குழந்தையுள்ளம்
கொண்டவரே கூற்றுவனின் தேசம் தன்னை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடி நீங்கள் சென்று விட்டீர்! தாத்தா நாங்கள்
    தினமிங்கே தேம்புகின்றோம் ஐயோ ஐயோ
ஓடி வரத் தெரியவில்லை பாதை தாத்தா
    உயிர் கருகத் துடிக்கின்றோம் ஐயோ ஐயோ

### உற்றார் உறவினர் புலம்பல்

வாசலுக்கு வந்து நின்று இருகை நீட்டி
    வரவேற்கும் வழக்கமுள்ள வசந்தப்பூவே
வீசிவிட்ட விதிப்புயலில் வீழ்ந்ததென்ன
    வெந்தழலில் வேகிவிட்ட மாயமென்ன
பாசநிலா தேய்ந்துவிட்ட வானமானோம்
    பயிரழிவைக் கண்ட விவசாயி ஆனோம்
ஊசலிடும் உணர்வுகளை உள்நிறுத்தி
    உயிர்த்துளியும் வற்றிவிடப் புலம்புகின்றோம்

### தேற்றம்

மழைநீரில் தோன்றுகின்ற குமிழி போல
    மறைவது தான் மனிதர்கள் வாழ்க்கையாகும்
உலகாண்ட அலெக்சாண்டர் மற்றும் சீசர்
    உன்னதமா மனிதர்கள் காந்தி நேரு
பலதேசம் போற்றுகின்ற எடிசன் டார்வின்
    பாரதியார் வள்ளுவனார் கம்ப நாடன்
நிலையற்ற பூவுலகை விட்டுச் சென்றார்
    நியதியிது! அறிந்திடுவோம் தேற்றம் கொள்வோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Dear beloved அம்மப்பா...

You've lived a long and wonderful life of many accomplishments, and I am proud to call you my grandfather.

I have many cherished memories of you when I visited Srilanka as a young child from playing 304 to tending the dogs back home. I particularly remember playing a game of 304 with along side my sibilings when my younger sister played the wrong card and we all shared a good laugh over the confusion. In all my memories of you, I always remember you as a kind man and loving grandfather.

Growing up, I have heard stories of great reknown about you. My mother would constantly remind me of your various academic and athletic pursuits. You are well known for your mastery in the field of Chemistry. I'm ever had the experience of watching you teaching a class or sharing your expertise in your own backyard. Even in retirement you continued to teach students impacting hundreds of lives for the better.

You may not be with us in person now but you will always stay with us in memory and in our hearts. May you rest in peace and find happiness in the next life as well.

*from*

***Pirawin***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Dear அம்மப்பா...

You've lived a life unlike many others filled with joy and wonder. You've done wonderful things and accomplished a lot in your life.

I have so many memories of you from when I visited Srilanka, from playing cards and Cricket to sitting and eating dinner beside you. Even when not in Srilanka, you've never forgotten about us by sending us amazing birthday cards and by calling us from Srilanka.

Growing up, my mother would always tell me about you from playing sports to teaching others, you were always number one. I remember when I was younger, you once drove me to the barber shop on the back of your motorcycle and it was amazing.

You may not be with us now but we will never forget you. Rest in peace , அம்மப்பா

*from*
***Vishwa***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் அம்மப்பா!

எங்கள் அன்பான அம்மப்பா. நீங்கள் ஒரு சிறந்த அறிவாளி. கனிவான மனிதர். நீங்கள் என் உடன் பிறப்புக்களுக்கும் எனக்கும் ஒரு அற்புதமான அம்மப்பா மட்டுமல்ல , நீங்கள் ஒரு அற்புதமான மகன், சகோதரர், கணவர், தந்தை மற்றும் ஆசிரியர்.

நான் ஒரு மாத வயது குழந்தையாக இருந்த போது நீங்களும் அம்மம்மாவும் என்னை எப்படி நன்றாக கவனித்துக் கொண்டீர்கள் என்பது பற்றிய கதைகளை அம்மா எப்போதும் என்னிடம் சொன்னார். நீங்கள் என் டயப்பர்களை மாற்றி, பால்மா பருக தந்து என்னை தூங்க வைத்தீர்கள். எனக்கு நினைவில் இல்லாவிட்டாலும், அதைப் பற்றிய சிந்தனை எப்போதும் என்னுடன் இருக்கும்.

அப்போது நான் 9 வயதில் இலங்கைக்கு வந்த நேரம் எனக்கு நினைவிருக்கிறது. உங்களுடனும் அம்மம்மாவுடனும் செலவளிக்க எனக்கு ஒரு பெரிய நேரம் இருந்தது. நீங்கள் என் உடன் பிறப்புக்களுக்கும் எனக்கும் பல விஷயங்களைக் கற்றுக் கொடுத்தீர்கள்.

நான் உங்களை கடைசியாக பார்த்தது எனக்கு 12 வயதாக இருந்த போது எனது குடும்பமும் நானும் இலங்கைக்கு வந்தோம். நாங்கள் எங்கள் பிறந்தநாளை ஒன்றாக கொண்டாடினோம். அது அருமையாக இருந்தது. நானும் எனது சகோதரர்களும் உங்களுடன் கிறிக்கெற் மற்றும் கார்ட்ஸ் விளையாடியது என்றும் என் மனதை விட்டு அகலவில்லை. எங்கள் எல்லோருக்கும் நேரம் இருக்கும் போதெல்லாம் நாங்கள் தொலைபேசியில் பேசினோம்.

நீங்கள் எங்களுக்கு அன்பைக் காட்டினீர்கள். “நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்?” , “பள்ளி எப்படி இருக்கிறது?” என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்பீர்கள். நீங்கள் உண்மையில் சிறந்த அம்மப்பா. நீங்கள் ஒரு அற்புதமான வாழ்க்கை வாழ்ந்தீர்கள். உங்களுக்கு ஒரு அன்பான மனைவி, 4 அழகான குழந்தைகள் மற்றும் இன்னும் 4 அழகான பேரக்குழந்தைகள் இருந்தனர். நீங்கள் ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு கற்பித்த ஒரு அற்புதமான வேதியியல் ஆசிரியராகவும் இருந்தீர்கள்.

நீங்கள் இப்போது எங்களிடமிருந்து புறப்பட்டு அங்குள்ள தெய்வங்களில் இருக்கிறீர்கள். நான் உங்களை உண்மையாக இழந்துவிட்டேன். நான் உங்களுடன் வைத்திருந்த நேசத்துக்குரிய நினைவுகளுடன் நீங்கள் என்றென்றும் என் இதயத்தில் இருப்பீர்கள். உங்கள் ஆன்மா சாந்தியடைவதாக!

நிறைய அன்புடன்
உங்கள் பேத்தி
**தீபிகா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்றென்றும் எம் நினைவில் நிறைந்திருக்கும் அன்புமாமா

"தாய்க்குப் பின் தாய் மாமன்" இந்தக் கூற்றை மாற்றி எங்கள் தாய்க்கே அன்னை, தந்தை, அண்ணன், ஆசான், பாதுகாவலன் என எல்லாமாக விளங்கியவர் எங்கள் மாமா. தான், தன் வீடு, தன்குடும்பம் என வாழும் இந்தக் காலகட்டத்தில் தான் சகோதரர்கள், மருமக்கள், உற்றார், உறவினர், அயலவர் என எல்லோர் மீதும் அன்பும் அக்கறையும் கொண்டவர். இப்படிப்பட்ட ஒரு மாமா எமக்குக் கிடைத்தது நாம் முற்பிறப்பினில் செய்த புண்ணியமாகும்.

எங்கள் அப்பா, அம்மாவையும் எங்களையும் ஊரில் விட்டு வெளியூரில் வேலை செய்தாரென்றால் அது உங்களின் மேலிருந்த நம்பிக்கையில் தான் மாமா. இந்த நம்பிக்கையை நீங்கள் என்றைக்கும் களங்கப்படுத்தியதில்லை. முக்கியமான தீர்மானங்களை எடுப்பதற்கும் ஆலோசனை கேட்பதற்கும் அம்மாவும், அப்பாவும் அணுகும் ஒரேநபர் நீங்களே. உங்கள் அறிவுரையின்றி அவர்கள் எந்த முடிவும் எடுத்ததில்லை. நீங்கள் என்றும் எங்கள் அப்பாவின் மதிப்பிற்கும் மரியாதைக்குமுரிய"சுந்தரண்ணா".

விடுமுறை ஓய்வுநேரம் என நீங்கள் உங்களுக்காக ஒதுக்கியதை நாம் அறியோம். ஓய்வுகிடைக்கும் நேரமெல்லாம் இரசாயனவியல் புத்தகம் படித்தபடி அல்லது குறிப்புகள் எழுதியபடி
இருப்பீர்கள் . உங்கள் வாழ்நாளில் பெரும் பகுதியை கற்பித்தலுக்காகவே அர்ப்பணித்தீர்கள். உங்கள் வீட்டுமுற்றம் சைக்கிள்களால் நிரம்பி இருப்பது இன்னும் எம் மனக்கண் முன் நிற்கின்றது. எளிமையான வாழ்க்கை, இலகுவான அணுகுமுறை என்பவற்றுக்கு நீங்கள் ஒரு முன் உதாரணம். குடும்பப் பொறுப்புகளை உங்கள் தலைமேல் ஏற்று பெற்றோராய் இருந்து சகோதரிகளின் நல்வாழ்வுக்கு வழிவகுத்தவர். நீங்கள் அவர்களுக்கும் உங்கள் குடும்பத்திற்குமாக இரண்டு இல்லங்களை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொந்தச் சம்பாத்தியத்திலேயே அமைத்தீர்கள். அப்பா வேலையின்றிச் சில காலம் இருந்த போது எம்மை நீங்கள் அரவணைத்த விதம் எம்மால் என்றும் மறக்க இயலாது.

மருமகன் என்றால் உங்களுக்கு அலாதிப் பிரியம். அவனை நீங்கள் கல்விகற்ற பாடசாலையிலேயே உங்கள் விருப்பப்படி கற்க வைத்து ஒரு வைத்தியனாக உருவாக்கி உங்கள் கனவுகளை நனவாக்கிக் கொண்டீர்கள். மருமகனின் மனைவியிடம் கூட மிகவும் அன்பாக, மறு மகளாகப் பழகினீர்கள். உங்கள் அன்பும் அரவணைப்பும், ஆசியுமே நாங்கள் தற்போது ஒரு நல்ல நிலையில் இருப்பதற்குக் காரணம் என்றால் அது மிகையாகாது.

உங்கள் இறுதிநாட்களில் நோயினால் நீங்கள் பட்டதுன்பம் மிகக் கொடியது. நல்லவர்களைத் தான் கடவுள் சோதிப்பார். ஆனால் நீங்கள் பட்டவேதனை அறிந்து அந்தக் கடவுள் மீதே மனக்கோபம் அடைந்தோம். உங்கள் மரணச் செய்தி இடியாய் எங்கள் தலையில் வீழ்ந்தபோது செய்வதறியாது சிலையானோம்.

உங்கள் இறுதி ஊர்வலமும் அம்மம்மாவின் இறந்த தினமும் ஒரேநாளாக அமைந்தது மிகவும் அதிசயமே. அம்மம்மாவின் செல்லப்பிள்ளை நீங்கள் என்பதை அம்மா சொல்லி அறிந்திருந்தோம். அவர் உங்களை "சுந்தரர்" என்று செல்லமாக அழைப்பாராமே. தனது விருப்பத்துக்குரிய மகனை தான் இறந்த அதே நாளிலேயே தன்னுடன் அழைத்துச் சென்றுவிட்டார். சொர்க்கத்தில் நீங்கள் அம்மம்மாவுடனும் விந்தண்ணாவுடனும் அவர்களுடன் இழந்த நாட்களை சந்தோஷமாக ஈடுகட்டிக் கொண்டிருப்பீர்கள் என்பதில் எமக்கு எந்தவித சந்தேகமும் இல்லை. இங்கு நாங்கள் தான் உங்களை இழந்ததுயரில் தவித்துக் கொண்டு இருக்கிறோம். எப் பிறவியிலும் உங்கள் அன்பையும் ஆசிகளையும் வேண்டிநிற்கும்.

***பானு,பாபு,மனோஜி,ஜெந்து***


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீரான கல்வி அபிவிருத்தி ஆசான் !

இலங்கைத் திருநாட்டின் வடபால் அமைந்த கற்றோரும், வல்லுனர்களும், அவதரித்த வடமராட்சியில்,புலமைநேசிக்கும், கரணவாய் மண்ணில் திரு க.சண்முகசுந்தரம் அவர்கள் அவதரித்தார்.

"பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல்"

என்ற தெய்வத் திருமறைக்கேற்ப செயற்கரிய கல்விச் சேவையைப் புரிந்த உத்தமர். தான்கல்வி கற்ற யா/உடுப்பிட்டி அமெரிக்கன்மிசன் பாடசாலையிலும் மேலும் பல பாடசாலைகளிலும் இராசாயனவியல் ஆசிரியராகப் பணியாற்றி, ஓய்வுபெற்று வடமராட்சி மண்ணிற்கு பெருமை சேர்த்த மனிதநேயம் மிக்க பண்பாளன். மற்றவர்களுக்கு உதவிசெய்வதில் முன்னிப்பவர்.

நான் கொழும்பில் கடமை புரிந்த காலகட்டத்தில் திரு க.சண்முகசுந்தரம் அவர்களும் அங்கு சிறிதுகாலம் வசித்துவந்தார். அந்தநேரத்தில்,கொழும்பிலுள்ள மாணவர்களுக்கும் தனது ஆசிரிய சேவையை திறம்படச் செய்துவந்தார். அதேபோல் யாழ் மாவட்டத்திலும் குறிப்பாக வடமராட்சி வலயத்திற்கு உட்பட்ட பகுதியில் உள்ள மாணவச் செல்வங்களுக்கு தனது கல்விச்சேவையை ஓய்வின்றி ஆற்றிவந்தார். அதற்கு எடுத்துச் சான்றாக இன்று அவரது மாணவர்கள் வைத்தியர்களாகவும், பொறியியலாளராகவும், அரசாங்க இலாக்காக்களிலும் கடமை புரிகின்றார்கள்.

நான் ஓய்வுபெற்று எனது சொந்த ஊரான கரணவாய் கிராமத்திற்கு வந்து, அங்குள்ள விபுலானந்தர் சனசமூகநிலையம் முன்பள்ளி, ஆகியவற்றின் தலைவராகவும், தென்கருணையூர் முருகையா ஆலய பொருளாளராகவும், பணியாற்றிய காலகட்டத்தில் என்னுடன் இணைப்பாளராகவும், ஒன்றிணைந்து சனசமூகநிலையம், முன்பள்ளி வளர்ச்சிக்கும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலய சிறப்புவிழாக்கள் நடைபெறும் காலங்களில் ஆலய வளர்ச்சிக்கும் விளையாட்டுத்துறையிலும் நமது மாணவர்கள் முன்நிலைப்படுத்தி, நேரகாலம் பார்க்காது அர்ப்பணிப்புடன் பணிபுரிந்தசீராளன் அத்துடன் தென்கருணையூர் கருப்பையடி மனோன்மணி மீனாட்சிஅம்மன் ஆலயத்தலைவராகவும், உடுப்பிட்டி பலநோக்கு கூட்டுறவுச் சங்க தலைவராகவும் சேவைகள் பலபுரிந்த சமயத் தொண்டனும், சமூகத் தொண்டனும் ஆவார்.

அன்னார் இவ்வளவு கூடிய சீக்கிரத்தில் எம்மையெல்லாம் விட்டுப் பிரிந்து செல்வாரென்று நினைத்துக் கூட பார்க்க முடியவில்லை. அவரது பூதவுடல் மறைந்தாலும் புகழ் உடம்பு என்றும் மறையாது.

அன்னாரது பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

***திரு. கந்தையா. சற்குணம்***
*"சமாதானநீதவான்"*
*J/ 348 –கரணவாய் தெற்கு,*
*கரவெட்டி.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்ககதவுக் குடும்பம்

யாழ் இந்துக் கல்லூரி விடுதிச்சாலை நம்மிருவரையும் இணைத்து வைத்தது. முப்பதாண்டிற்கு மேற்பட்ட உறவில் ஓர் கனதி. ஒரு நாளாவது கருத்து வேறுபாட்டினால் முரண்பாடாக பேசிக் கொண்டது கிடையாது. எதனையும் மனம் விட்டுப் பேசி ஓர் முடிவுக்கு வந்துவிடுவோம். இவையெல்லாம். அன்பர் சண்முகசுந்தரத்தின் உளவியல் இயல்பாக்க இசைவினாலாகும்.

இவர் இளமைப் பருவம்,குடும்ப வாழ்வில் வீசிய புயல்களிலிருந்து வாழ்க்கைப் படகை வெற்றிகரமாக நகர்த்திச் சென்ற வல்லவர். சூழ்நிலைக்கேற்ப தன்னை தனியார் கல்வி நிலைய ஆசானாக தயார்படுத்திக் கொண்ட மேதை. தமிழ் சமூகத்திற்கும் மாணவர்களுக்கும் உரமாகவும்,வீரப் புதல்வனைப் பெற்றெடுத்த தீரனாகவும் திகழ்ந்து ஆசிரியப் பணி கற்பித்தல் மட்டுமல்ல எவ்வெவ் விடயங்களில் வேண்டப்படும் தேவைகளை நிறைவு செய்து சமூக உற்பத்தியாளர் என்ற சொற்பதத்தை ஆசிரியர்களுக்கும் சூட வைத்த பேருபகாரி. விளையாட்டு மைதான நிகழ்வுகளில் சளைத்தவரல்லர். என்பதை நிருபித்தவர். எல்லாவற்றிக்கும் மேலாக "நிலாச் சோறு" எனும் தமிழர் பண்பாட்டை துணைவியார் பவளக்காவின் துணை கொண்டு மழலையாகவும் குழந்தையாகவுமிருந்த தன் பிள்ளைகளுக்கும் ஏன் உறவுகளுக்கும் மாணவர்கட்கும் விருந்தினர்கட்கும் அள்ளி வழங்கும் தங்ககதவுக் குடும்பமாக திகழ்ந்ததை நான் கண்டு மகிழ்ந்ததுண்டு.

நிலாச்சோறு நிலாச்சோறு அன்பின் வெளிப்பாடு
நிலாச் சோறு ஆரோக்கியத்தின் அமுது
தாலாட்டி ஊட்டுவது நிலாச்சோறு
மகிழ்ச்சியில் மிதக்க வைப்பது நிலாச்சோறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகைப்படங்களை சேகரிப்பது அன்பரது Hobby. புகைப்படங்கள் அசையாமல் ஆயிரம் கதைகள் பேசும் வல்லமை கொண்டவை என அமெரிக்க சிறுகதை எழுத்தாளர் ஒருவர் எழுதியமை நம்மை கடந்து போன கடந்த காலத்தை பிடித்து வைத்திருப்பவையும், நினைவுபடுத்துவதும் கல்வெட்டுக்களுக்கு கனதி கொடுக்கும் விம்பங்களாகும்.

சுந்தரண்ணா என அவரது சுற்றாடல் அவரை உண்மை அன்பு பாசத்துடன் அழைத்ததை நான் நன்குணர்ந்தறிந்தவன். அதற்கேற்ப அவர் குறிப்பாக பொருளாதார நடவடிக்கைகளை கையாண்டிருக்கிறார். நிறைய விட்டுக்கொடுப்பனவுகள் கொண்ட துணையாளுடன் கூட்டுக்குடும்ப வாழ்க்கை நிகழ்ந்திருக்கின்றது. இவையெல்லாம் இந்துக் கல்லூரி விடுதியில் நல்லெண்ணெய் வாராவாரம் வைத்து சீயாக்காய் தேய்த்து முழுகி (தோய்ந்து) வகுப்பறைகளில் கற்றதுடன் மைதானத்தில் ஓடி, உருண்டு உயரம் பாய்ந்து வெற்றி தோல்விகளை கண்டு சகிப்புத்தன்மை ஊற்று நிறையப் பெற்றமையினால் உருவானவை. இத் திறன்களை கரணவாய், உடுப்பட்டி மைதானங்களிலும், மனவெழுச்சிகளை வாழ்வியல் முறைகளிலும் பிரயோகித்து சமூகத்திற்கு மிகப் பொருத்தப்பாடானார். இவ்வியல்புகள் இவரை வாழ்விடங்களில் முன்னிலைப்படுத்தலுக்குட்படுத்தின.

எமில் விக்டர் பிரான்சினால் எழுதப்பட்ட உலகப் பிரசித்தி பெற்ற நூல் MANS SEARCH FOR MEANINIS ஒரு மனிதனுடைய வாழ்வினை மகப்படுத்துவன உருவாக்குதல், அன்பு, தியாகம் என்ற மூன்றுமாம்.

**1. ஏதாவது ஒன்றை சரியாக அழகாக உருவாக்குதல்** கூட்டுக்குடும்ப வாழ்க்கையை வெளிநாடு செல்லாது உருவாக்கிய பெரும்தகை.இதனால் வம்சாவழியினர் இதமாகவும், கௌரவமாகவும் வாழ்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2. அன்பால் மனிதர்களை ஆட்கொள்ளல்**

சுவிஸ் நாட்டிற்கு அழைத்தது. உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரிக்கு இவரது நம்பிக்கையில் பெரும்தொகை நிதி திரண்டது. இறுதிப் பயணத்தில் உரிய கௌரவம் வெளிநாடுகளிலும் நினைவு கூரப்படுகின்றது.

**3. தவிர்க்க முடியாத சூழ்நிலையில் தியாகம்**

நாட்டிற்காக வீரவேந்தனையும் அர்ப்பணித்து பிள்ளைகளின் நல்வாழ்விற்காக தன் முதுமைக்கால சுகபோகத்தை தவிர்த்தமை. மனித வாழ்வில் பெற வேண்டிய சுகத்தை தவிர்த்தமை அவரது பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் மகிழ்ச்சியாக இதமாக வாழ்கையில் ஓர் திருப்தி!

தெரிந்தோ தெரியாமலோ சண்முகசுந்தரம் எனும் மனிதம் உறவுகளையும் சமூக தேவைகளை நிறைவு செய்யும் மனிதர்களையும் உருவாக்கியதால் அவர்கள் அன்புக்கு ஈடாகி உறவுகள் ஏக்கத்துடன் தொடர்கின்றனர் பணிகளை. நற்பணி செய்த மனிதம் பிறவி ஈடேற்றம் பெற பிரார்த்திக்கின்றனர்.

*பொ. ஸ்ரீஸ்கந்தராசா*
*முன்னை நாள் யாழ் இந்துக்கல்லூரி பிரதி அதிபர்*
*முன்னை நாள் தவிசாளர் பூநகரி பிரதேச சபை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்ல உள்ளம் உறங்குவதில்லை

பூமிக்கு நாம் ஒவ்வொருவரும் யாத்திரைக்கு வருகின் றோம். அவ் யாத்திரை முற்றுப்பெறு முன்னர் நித்திரைக்கும் போய்விட்டோம். நித்திரை போவது நியதியென்றாலும் யாத்திரை என்பது தொடர்கதையாகும். இதுதான் மனித வாழ்வின் தத்துவம். பிறப்பு இல்லாத நாளொன்றும் இல்லை. இறப்பு இல்லாத நாளொன்றும் இல்லை. ஆதலால் எவ்வளவு காலம் வாழ்ந்தோம் என்பதைவிட மனிதப்பிறவி எடுத்ததன் மூலம் சமூகத்திற்கு நாம் சாதித்தது என்ன? என்பதைச் சிந்திக்க வேண்டும். காக்க வேண்டியவற்றைக் காத்து, கடிய வேண்டியனவற்றைக் கடிந்து, மக்கள் சேவையே மகேசன் சேவை என வாழ்ந்தவர்தான் அமரர் சண்முகசுந்தரம்.

ஐந்து தசாப்தங்களுக்கு மேலாக ஆசிரியத்துவத்தை அர்ப்பணிப்புடன் நேசித்த மாமனிதனே அமரர் சண்முகசுந்தரம். இறைவன் படைத்த குழந்தைகளுக்கு அறிவியல் என்னும் அறிவுக் கண்ணைக் கொடுத்து, ஞான ஒளி பாய்ச்சி, வாழ்வாங்கு வாழவைத்தவர் அமரர் சண்முகசுந்தரம். தம் அறிவியல் போதனையால் பொறியியலாளர்களையும், வைத்தியர்களையும், விஞ்ஞான பட்டதாரிகளையும் உருவாக்கியவர். அவரது நல்லறிவுப் போதனையால் தலைவர்கள், தியாகிகள், சமூகத் தொண்டர்கள் எனப் பலர் தோன்றினர். அவரது நல்லொழுக்கப் போதனையால் நீதி, நேர்மை, அன்பு, அர்ப்பணிப்பு என்பன அவர் உருவாக்கிய ஆசிரியர்களிடையே நிரந்தரமாகவே குடி கொண்டது.

காலையில் ரோஜா மலர்கின்றது. மறுநாள் அது உதிர்ந்து போகின்றது. ஆனால் அது உதிர்ந்துகொள்வதன் முன் அது ஏற்படுத்தும் சலனங்கள் எவ்வளவு காலம் சென்றாலும் நிலைத்து நிற்கின்றன. மனிதர்களும் வருகின்றார்கள், போகின் றார்கள். ஆனால் காலத்தைக் கடந்து நிற்பவர்கள் ஒரு சிலர்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால்தான் மரணம் மனிதனின் மறைவல்ல. நினைவுகளின் ஆரம்பம். அவ்வகையில் காலத்தை வென்று எம் நினைவுகளில் தொடரும் மாமனிதரே அமரர் சண்முகசுந்தரம்.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியின் பழைய மாணவர். அக்கல்லூரியை வளர்த்தெடுத்த ஆசிரியர். உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி அவருக்கு வீடு. அங்கு கல்வி பயிலும் மாணவர்கள் அவரின் குழந்தைகள். அங்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களும், பணியாற்றும் ஊழியர்களும் அவரின் சகோதரர்கள். கல்லூரியின் சன்னா வெட்டை விளையாட்டுத் திடலின் தானைத் தளபதி. இவ்வாறெல்லாம் எழுதப் புகும்போது அவர் ஒரு வற்றாத ஜீவநதி. இரசாயனவியலப் போதித்த அமரர் சண்முகசுந்தரத்தின் ஆசிரிய சேவையைப் புகழாத நாளெல்லாம் பிறவா நாளே.

சாந்தி பெறுக.

**கி. நடராசா**
முன்னாள் அதிபர்,
உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதருள் மாணிக்கம்

இவ்வுலகில் வருவோர் போவோர் என்ற நிகழ்வு நடைபெற்றுக்கொண்டே இருக்கின்றது. வருபவர்களில் ஒரு சிலரே மனிதகுல வாழ்விலே நீங்காத இடத்தைப் பிடித்துள்ளனர். அந்த வகையில் அமரர் சண்முகசுந்தரம் ஆசிரியர் அவர்கள் கல்வி உலகில் மிகவும் உன்னதமான இடத்தைப் பிடித்துள்ளார். "செய்யும் தொழிலே தெய்வம், அதில் அவரவர் திறமையே செல்வம்" என்பதற்கு ஏற்ப தனது ஆசிரியத் தொழிலை மன விருப்பத்தோடு ஏற்று செயற்படுத்தியவர். வகுப்பறையில் கற்றல் கற்பித்தலை, மாணவர்களை மகிழ்ச்சிகரமான நிலையில் இருத்தி மேற்கொள்ளும் ஆளுமை கொண்டவர்.

மூன்று பாடங்களில் கற்பிக்கும் ஆற்றலைக் கொண்டிருந்த போதும் இரசாயனவியல் பாடத்தையே முதன்மையாகக் கொண்டு போதித்தார். நான் இரசாயன பாடத்தை O/L, A/L வகுப்புக்களில் அவரிடம் கற்பதற்கான பாக்கியத்தைப் பெற்றேன். காலவோட்டத்தில் நான் கணித - விஞ்ஞான ஆசிரியரானேன். நான் விக்னேஸ்வராக் கல்லூரியில் கடமை யாற்றிய காலத்தில் அவரின் இரு புதல்வர்களுக்கும் கணித பாடத்தைக் கற்பிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது.

நான் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரிக்கு இட மாற்றம் பெற்றுச்சென்றபோது எனக்கும் சண்முகசுந்தரம் ஆசிரியருக்குமான தொடர்பு அதிகரித்தது. அவர் அக்கல்லூரி யின் மாணவன். பழைய மாணவர் சங்கத்தின் உறுப்பினர். நாட்டில் ஏற்பட்ட அனர்த்தத்தால் தரைமட்டமாகிய எமது கல்லூரியை மீண்டும் தலைநிமிர்ந்து நிற்பதற்கு பழைய மாணவர் சங்கத்துடன் சேர்ந்து செயற்பட்டவர். நான் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியின் அதிபராக இருந்த காலத்தில் பழையமாணவர் சங்கத்தின் தலைவராக அமரர் சண்முகசுந்தரம் ஆசிரியர் பொறுப்பேற்றார். அப்போது நாட்டின் நடப்பு நெருக்கடி யாக இருந்த காலம். சங்கத்தின் நிதி நிலைமையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவலையளிப்பதாகவே இருந்தது. சங்கத்தின் நிதி நிலையை உயர்த்துவதற்கு வெளிநாட்டில் இருக்கும் எமது கல்லூரியின் பழைய மாணவர் சங்கங்களுடன் தொடர்பை ஏற்படுத்தி தாய்ச் சங்கத்திற்கு பெருமளவு நிதியைப் பெற்றுக்கொடுத்தார். கல்லூரியின் தேவைகளிற்கான செலவுகளை திருப்தியான விதத்தில் தந்து கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை ஊக்குவித்தார்.

தனது கல்லூரியை ஆழமாக நேசித்த ஒரு பெருமகனார் இன்றும் தனது கல்லூரிக்கு பல விடயங்கள் செய்யவேண்டும் என முன்னாயத்தங்கள் செய்து கொண்டிருந்த வேளை சங்கத்தின் தலைமைப் பொறுப்பிலிருந்து விட்டுச்சென்றார். இச் சூழ்நிலை அவரிற்கு பெரிய மனச்சோர்வையும், உடல் தாக்கத்தையும் ஏற்படுத்தியது. கல்லூரிக்கு பெருமை சேர்த்த, தான் மிகவும் நேசிக்கும் நல்ல மாணவர்கள் தன்னைச் சரியாக விளங்கிக்கொள்ள முடியாதவர்களாக இருக்கின்றார்கள் என்பதை கவலையோடு ஒரு சந்தர்ப்பத்தில் சொல்லியுள்ளார்.

அடிக்கடி அவர் வீடு சென்று சுகநலன்களை விசாரிப்பது எனக்கு வழக்கமான காரியமாக இருந்தது. தான் மாணவனாக இருந்த காலத்து முக்கியமான சம்பவங்களை நினைவுகூர்ந்து சொல்லுவார். தனது ஆசிரியர் காலத்துச் சம்பவங்களையும், தன்னுடன் கடமையாற்றிய ஆசிரியர்களின் நல்ல விடயங்களை யும் சொல்லுவார். அக்காலத்தில் தனக்கு ஏற்பட்ட நன்மை தீமைகளையும் சொல்லுவார். நல்ல மனவலிமையுடனும், உடல் ஆரோக்கியத்துடனும் இருந்த தனக்கு உடல் ஆரோக்கியம் குறைந்து செல்வதையும் சொல்லுவார். ஆரோக்கியம் குறைந்த நிலையில் இருக்கும் தனது துணைவியார் இன்முகத்துடன் தனது தேவைகளை நிறைவேற்றுவதையிட்டு கவலையடைந் திருந்தார்.

இவ்வுலகில் சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டிருக்கும் மனிதனிற்கு ஒரு நிலையில் இயலாமை ஏற்படுவது நியதி. அந்த நிலை அவரிற்கு ஏற்பட்டது. அந்தவகையில் அவர் மிகவும் கவலையடைந்தார். நோய்வாய்ப்பட்டார். சுயமாக இயங்க முடியாது படுக்கையாளரானார். கைலாகு கொடுத்துவிட்டு போட்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகிறேன் சேர் என்று வழமைபோல் சொல்லி வெளியேறினேன். போட்டுவா என்றார். அவர் எங்களை எல்லாம் விட்டுப் போய் விட்டார். இயற்கையின் நியதி அப்படியாகிவிட்டது.

அவரில் காணப்பட்ட நல்ல பண்புகள் எல்லோரையும் அன்பாக நேசித்தல், வெளிப்படைத் தன்மை, தனது எண்ணத்தில் பட்டதைப் பயமறியாது வெளிப்படுத்தல், தனது திறமையிலும் ஆளுமையிலும் நம்பிக்கை, எவரிடமும் எந்தச் சலுகையும் பெறாமை, தன் நலனிற்காக பந்தம் பிடிக்காமை, குடும்ப உறவுகளை நேசித்தல், எளிமை இவை சாதாரண மனிதரில் காண்பது அரிது.

புத்திர சோகம் என்பது சொல்லொணாத் துயர் கொண்டது. தனது மூத்த மகன் சாவடைந்தபோது அவர் உதிர்ந்த இதயத்தை தொடும் வார்த்தைகள் :

மக்களுக்காக மரணிப்பது வாழ்வதிலும் பார்க்கச் சிறந்தது. எனது மகனின் மகத்துவம் மிக்க மரணத்திற்காக நான் அஞ்சவில்லை, அழுது துடிக்கவில்லை.

"வீர மரணம்" வாழ்விலும் பார்க்க பெறுமானம் உள்ளதாக கருதுகின்றேன். ஆனால் அந்தச் சாவில் எழுதிய சகாசங்கள் யாவும் எம் மக்களால் மறக்கப்பட்டால் அல்லது இந்தப் புரட்சிப் பூக்களின் கனவுகள் நனவாக்கப்படாதுபோனால் என் மகனின் மரணத்திற்காக அப்போதுதான் அழுவேன்.

அமரர் சண்முகசுந்தரம் ஆசிரியரின் பண்புகளை நோக்கும் போது அவர் ஒரு 'மாமனிதன்'. அவரின் பிரிவு எல்லோருக்கும் பேர் இழப்பாகும். அவரின் ஆத்மா சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி

**க. தர்மலிங்கம்**
முன்னாள் அதிபர், மாணவன்
உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெஞ்சில் தடம் பதித்த ஆசான்
## அமரர். க.சண்முகசுந்தரம் அவர்களுக்கு
## எங்கள் இறுதி வணக்கங்கள்!

யாழ்ப்பாண மாவட்டத்தின் புகழ் பூத்த இரசாயனவியல் ஆசிரியரும், சிறந்த சாரண ஆசிரியருமான எங்கள் பேரன்புக்கும் பெருமதிப்புக்கும் உரிய நல்லாசான் உயர்திரு.க. சண்முகசுந்தரம் அவர்கள் தனது 84 ஆவது வயதில் எம்மை விட்டுப் பிரிந்து சென்று விட்டார் என்ற செய்தி ஒரு சாதாரண மனிதரின் இழப்பாகப் பார்க்க முடியாது. வடபுலத்தின் விரல் விட்டு எண்ணக்கூடிய கல்வியாளர்களில் அமரர்.சண்முகசுந்தரம் அவர்களும் ஒருவர் என்பதற்கான மாற்றுக் கருத்தும் இல்லை.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியின் பழைய மாணவரான திரு.க.சண்முகசுந்தரம் அவர்கள் விஞ்ஞானமானி பட்டத்தைப் பெற்றுக் கொண்ட பின்னர் தன்னை உருவாக்கிய அதே கல்லூரியிலேயே இரசாயனவியல் ஆசிரியராகப் பணிபுரிந்த அந்தக் காலம் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியின் பொற்காலமாகவே இருந்தது.


அமரர் க. சண்முகசுந்தரம் அவர்கள் எங்களுக்கு க.பொ.த. உயர்தர வகுப்பில் இரசாயனவியலைக் கற்பிக்கும் பொழுது, மிக எளிமையாகவும், நகைச்சுவையாகவும், செய்முறை ரீதியாகவும் அவர் கற்பித்தலில் காட்டிய ஆர்வமும், நுட்பங்களும் என்னையும் ஒரு சிறந்த விஞ்ஞான ஆசிரியராக அவர் வழி தொடரச் செய்தது.

எங்களின் இரசாயனவியல் ஆசிரியராகக் கடமையாற்றிய காலத்திலேயே உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியின் 13வது யாழ்ப்பாண சாரணர் குழுவின் சாரண ஆசியராக, எங்கள் விலங்கியல் ஆசான் அமரர் கோ.செல்வவிநாயகம் அவர்களுடன் இணைந்து பணியாற்றி எங்களையும் சாரணர் வாழ்விற்குள் ஈடுபடுத்தியதால் எங்களுடைய கல்லூரியின் சாரணர் குழு அகில இலங்கையின் மெறிற் கொடிகளைப் (ISLAND MERIT FLAG)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல தடவைகள் பெற்றுச் சாதனை படைத்தது. அன்று சாரணர் பாசறைகளில் அவர்களின் கீழ் நாங்கள் பெற்ற பயிற்சிகளும், வழிகாட்டல்களுமே, எங்களைப் பிற்காலத்தில் மிகச்சிறந்த நிர்வாகியாக வளர்த்தெடுக்க உதவியது.



சாரணர் பாசறை வாழ்க்கையில் எங்களுடன் இரவு நேரங்களில் தங்கியிருக்கும் பொழுது, தான் ஒரு ஆசிரியர் என்பதையும் மறந்து எங்களுடன் உற்ற ஒரு நண்பராகவே பழகி எங்களை நல்வழிப்படுத்தியதுடன், எங்களுடன் சாரணர் விளையாட்டுக்களிலும், பாசறைத் தீ நிகழ்ச்சிகளிலும் பயிற்சி கொடுத்தும், பங்குபற்றியும் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, நேர்மை, நேரம் தவறாமை, நல்ல தொடர்பாடல் திறன், பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் ஆற்றல்கள் போன்ற திறன்களை எங்களுடைய வாழ்வில் கடைப்பிடிக்கும் வகையில் உன்னதமான ஒரு வழிகாட்டியாகத் திகழ்ந்தவர்.

அதேவேளை நாங்கள் உயர்தர வகுப்பில் கல்வி கற்றுக் கொண்டிருந்த காலத்தில் அப்பொழுது மிகச் சிறப்பான விஞ்ஞான வெளிக்களச் சேவையை ஆற்றி யாழ் மாவட்ட மாணவர்களின் விஞ்ஞான ஆற்றலையும், ஆய்வு ஊக்கத்தையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேம்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட ஆரம்பகர்த்தாக்களில் இவர்களும் குறிப்பிடத்தக்கவர்கள். தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தின் ஊடாக எங்களுடைய விஞ்ஞான அறிவையும், ஆர்வத்தையும் அதிகரிக்கும் வகையில் உதவிக் கொண்டிருந்த தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்திற்கு அமரர்களான கோ.செல்வவிநாயகம் அவர்களும், க.சண்முகசுந்தரம் அவர்களும் எங்களை அழைத்துச் சென்று இரவு நேரங்களிலும் கூடவே இருந்து விஞ்ஞான வெளிக்களப் பயிற்சிகளையும், நீர் உயிரியல் ஆய்வுகளையும் வழங்கிவந்த அந்த உயர்ந்த மனிதர்களைப் போன்ற சேவையாளர்களின் பங்கேற்பு இல்லாமையால், வெளிக்களநிலையம் தொடர்பான செயற்பாடுகளுடன் எவ்வித அனுபவமும் இல்லாதவர்களினால் பொறுப்பேற்கப்பட்டு தனியார் வீடுகளிலும், கல்வித் திணைக்கள அறையிலும் பல வருடங்கள் முடங்கி இருந்த வெளிக்கள நிலையம், அதன் ஆரம்பகால குறிக்கோள்களைத் தூக்கி எறிந்து விட்டு மாணவர்களுக்கு வினாத்தாள்களை அடித்து விற்பனை செய்யும் ஒரு நிலையமாக மாறியிருந்ததால், அந்த உயர் கல்வி நிலையத்தின் சேவைகள் எமது தமிழ்மொழி மூல மாணவர்களுக்குக் கிடைக்காமல் போய் விட்டது. இது தொடர்பாகப் பல தடவைகள் அமரர்களான கோ.செல்வவிநாயகம், க.சண்முகசுந்தரம் ஆகிய இருவரும் அதனை மீண்டும் தொண்டைமானாற்றிலேயே இயங்கச் செய்ய வேண்டுமென்பதில் பல தடவைகள் என்னுடனும் பேசியிருந்த பொழுது, அவர்களுடைய ஆதங்கத்தையும், தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தின் மீது கொண்டிருந்த பற்றுதலையும் என்னால் உணர முடிந்தது.

இந்த நிலையில் நான் வல்வெட்டித்துறையின் நகரபிதாவாகத் தெரிவு செய்யப்பட்டதும் பச்சைக்கட்டிடம் என்று கல்வி உலகில் புகழ் பெற்றிருந்த தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தை எனது பதவிக் காலத்தில் தொண்டைமானாற்றிலேயே செல்வச்சந்நிதி ஆலயத்தின் ஆற்றங்கரை வீதியில் மீண்டும் இயங்கச் செய்வதற்கான தீர்மானத்தை நகரசபையின் முதலாவது அமர்விலேயே கொண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்ததைத் தொடர்ந்து அதனை மீண்டும் இயங்கச் செய்வதற்கான நடவடிக்கைகளும் உடனடியாக என்னால் எடுக்கப்பட்டன.

அப்பொழுது, எனது உறவினரும், செல்வச் சந்நிதி ஆலயத்தின் பிரதமகுருக்களில் ஒருவருமான சிவஸ்ரீ.த.அகிலேந்திர ஐயர் அவர்களிடம் இருந்து அன்பளிப்பாகப் பெறப்பட்ட ஒன்பது பரப்புக் காணியில் கட்டப்பட்ட அழகான மூன்று மாடிக் கட்டிடத்தை வெளிக்கள நிலைய நிதியில் இருந்தும், தொண்டைமானாறு சந்நிதியில் இருந்து வெளிக்கள நிலையம் வரை செல்வதற்கான தார் வீதியை நெல்சிப் திட்ட நிதியில் இருந்து ஒரு கோடி ரூபா செலவிலும் அமைத்துக் கொடுத்தேன். ஆனால் அதனைத் தொடர்ந்து வருடாந்த பொதுக் கூட்டம் வைப்பதற்கு மட்டுமே அந்தக் கட்டிடம் பயன்படுத்தப்பட்டு வருவதுடன் ஏனைய அவர்களது தேவைக்காக யாழ்ப்பாணத்தில் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து அதில் இருந்து கொண்டு வினாத்தாள்களை அடித்து விநியோகித்து வருகின்றனர். அந்தப் பிரமாண்டமான கட்டிட வசதிகளைக் கொண்ட தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தை முறைப்படி செயற்படுத்தும் ஆற்றல் இல்லாதவர்களின் பிரதேச வேறுபாடு காரணமாகவும் "பச்சைக் கட்டிடம்" என்று ஒரு காலத்தில் புகழ்பெற்ற நிலையம் தனது பச்சைநிற அடையாளத்தையும் இழந்து வினாத்தாள்களை அடித்து விற்பனை செய்யும் நிலையமாக மட்டுமே செயற்படுவதைப் பார்த்து ஆரம்பகர்த்தாக்களில் முக்கியமானவர்களான அமரர்களான கோ.செல்வவிநாயகம் அவர்களும் க.சண்முகசுந்தரம் அவர்களும் எத்தனை நாட்கள் கவலைப்பட்டு என்னுடன் பேசியிருப்பார்கள். ஆனால் சண்முகசுந்தரம் சேர் எதிர்பார்த்ததைப் போன்று மீண்டும் அதனைத் தொண்டைமானாற்றிலேயே இயங்கச் செய்யவேண்டும் என்ற நம்பிக்கையில் அவரிடம் கல்வி கற்ற வடமராட்சியின் ஆசிரியர்களும், கல்வியாளர்களும் எதிர்பார்த்திருக்கின்றார்கள். அதனை முழுமையாக மாணவர்களும் ஆசிரியர்களும் பயன்படுத்தி அதன் நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் இயங்கச் செய்தால், அதுவே நாங்கள் அவர்களுக்குச் செய்யும் அஞ்சலியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது நீண்டகால சேவையின் பின்னர் எங்களுடைய கல்லூரியில் இருந்தும் இடமாற்றம் பெற்று, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும், காட்லிக் கல்லூரியிலும், பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையிலும் சில காலங்கள் இரசாயனவியல் ஆசிரியராகவும் விரிவுரையாளராகவும் கடமையாற்றி யாழ் மாவட்ட விஞ்ஞான மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் உள்ளங்களில் அழியா இடத்தைப் பெற்றுக் கொண்டவர்.

அதே காலப் பகுதியில் 1979 ஆம் ஆண்டில் இருந்து 1993 ஆம் ஆண்டு வரை வல்வெட்டித்துறையில் மிக உயர்ந்த கல்விச் சேவையை வழங்கிக் கொண்டிருந்த வல்வைக் கல்வி மன்றத்தில் எங்களுடைய பிள்ளைகளுக்கு மிகச் சிறப்பாக இரசாயனவியல் பாடத்தைக் கற்பித்ததால், அன்று அவரிடம் கற்ற பல மாணவர்கள் வைத்தியர்களாகவும், பொறியியலாளர்களாகவும், விஞ்ஞானப் பட்டதாரிகளாகவும் தகைமை பெற்று இன்று இலங்கையில் மட்டுமல்லாது, உலகளாவிய ரீதியில் வல்வையின் புகழைப் பரப்பிக் கொண்டிருக்கின்றார்கள். எனக்கு இரசாயனவியலைக் கற்பித்து என்னை ஒரு சிறந்த விஞ்ஞான ஆசிரியராக ஆக்கி அன்று மகிழ்ச்சியில் திளைத்த அமரர் க.சண்முகசுந்தரம் அவர்கள் நான் கற்ற பாடசாலையான உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரிக்கே 1991 இல் அதிபராகக் கடமையாற்றிய பொழுது என்னை நேரில் வந்து வாழ்த்தி ஆசி கூறிய எனது ஆசானாகிய அமரர் க.சண்முகசுந்தரம் அவர்களும் மற்றும் அப்போதிருந்த எனது ஆசான்களும் எனது கல்லூரிக்கே வந்து மனப்பூர்வமாக வழங்கிய ஆசிகளினால் நான் ஒருபுகழ் பெற்ற அதிபராக எனது பணியை ஆற்றி அதில் வெற்றியும் பெற முடிந்தது.

அமரர் க.சண்முகசுந்தரம் அவர்கள் கல்விச் சேவையை எவ்வாறு இதயசுத்தியுடன் வழங்கினாரோ அதற்கும் மேலாக தமிழ் தேசியத்தையும் நன்கு நேசித்த ஒரு இனப்பற்றாளராகவும் இருந்தார் என்பதை நான் அறிந்திருக்கின்றேன். அவரது மகன் அரவிந்தன் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இணைந்து தமிழ் மக்களுக்காகப் போராடி வீரச்சாவடைந்த பொழுது, அவரைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தித்து ஆறுதல் கூறச் சென்றபொழுது, அந்த ஆறாத துயரத்தின் மத்தியிலும், "எனது மகன் நோய் வந்தோ அல்லது விபத்தில் சிக்கியோ அல்லது தற்கொலை புரிந்தோ அல்லது கொலை செய்யப்பட்டோ அவலச் சாவடையவில்லை..... எங்களுடைய மக்களுக்காகவும் மண் மீட்புக்காகவும் போராடி வீரச்சாவடைந்த ஒரு மாவீரன்" என்று கூறிப் பெருமையடைந்த ஒரு உறுதியான நல்ல மனிதரை எங்களுடைய வடமராட்சி மண் இன்று இழந்து தவிக்கின்றது.

சண்முகசுந்தரம் சேர் அவர்கள் எனது வாழ்விலும் விஞ்ஞான அறிவை ஊட்டியதுடன் மட்டுமல்லாது எனது மகனின் இரசாயனவியல் ஆசிரியராகவும் இருந்து எங்களை நல்வழிப்படுத்தியதை நினைக்கும் பொழுது எனக்குப் பெருமையாகவும் இருக்கின்றது.

அவரது அப்பழுக்கில்லாத தூய சேவையின் பயனாக அவரது பிள்ளைகள் இன்று உயர்ந்த நிலையில் கௌரவமான வாழ்க்கையை வாழ்வதைப் பார்க்கும் பொழுது நல்ல பண்புகளைக் கொண்ட சேவையாளனுக்கு எல்லா நன்மைகளும் தானாகவே வந்துவிடும் என்பதை நிதர்சனமாகப் பார்க்கின்றோம். அவர்களின் பிள்ளைகளின் சேவைகளும்,செயல்களும் நாளையும் அவரது பெயரை வாழவைத்துக் கொண்டிருக்கும் எங்களை நல்வழிப்படுத்தி இந்தமண்ணில் நல்ல மனிதர்களாக வாழ வழிவகுத்த எங்கள் ஆசான் அமரர்.க.சண்முகசுந்தரம் அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் அவரை இழந்து தவிக்கும் அவரது மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள் மற்றும் கல்விச் சமுகத்தினர் அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

***ந.அனந்தராஜ்,***
*முன்னாள் அதிபர்,*
*உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி,*
*வல்வெட்டித்துறை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Appreciation

Mr.Kandiah Shanmugasundaram better known as CHEMISTRY – SHAN hails from an erudite family. From his very young age he was keenly interested in Science subjects particularly CHEMISTRY. He developed the aptitude for it before, during and after his university career. As a degree holder and as a teacher of chemistry in the renowned schools in the Jaffna district, he impressed upon the students his proficiency in the subject and his efficiency in imparting the subject matter lucidly and effectively. Catering the varied capabilities and talents of his students.

Students in the Jaffna district are blessed to have had the rare opportunity to study under him. His tutelage had enabled them to score very high marks and perform excellently well in the university entrance examinations and other competitive examinations conducted at the Zonal, District, Provincial and National levels. He had althrough been an exemplary teacher. His teaching is still cherished by his past students who have made their marks especially in the Medical and Engineering fields locally as well as in the foreign climes. His role was not confined to teaching only. He was very much interested in sports activities too. He, himself was a good sportsman. During his school days, he had displayed his talents in Sports and had won marvellous prizes and accolades. The best sportsmanship qualities he had learnt and imbibed in the hearts of hearts had paved the way for a fair just, upright, disciplined and decent living. In his day to day life, he had steadfastly adhered to honest, impartial, unbiased, unselfish, broad minded and accommodating way of life. The root cause for his satisfactory and successful life



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

had been his contented attitude. He was never too ambitious. He didn't aspire for more and more promotions and achievements. The notable characteristic in him was, he would never stoop to the very lowest level to gain his ends. He feared none because he executed the duties and responsibilities entrusted with him whether at schools or in the public institutions diligently and justly. He was a faithful, amiable and an able adviser and guide. He would wholeheartedly welcome anyone who sought his assistance or any clarifications on any issue under his purview.

Besides being engaged in teaching, he ungrudgingly undertook the heavy responsibilities of heading the Uduppiddy –M.P.C.S administration. During his presidency at the union , he made all the attempts possible to weed out the malpractices that had seen the norm for very many years. His tenure of service at the union was highly praised for his efficiency and integrity.

His contribution in monitoring and directing the activities of the Hindu Kovils are praise worthy. One distinctive quality in him was, he would under no circumstance tolerate hypocrisy, untruth fulness and deceptive manners. He stood for justice and equal treatment for all irrespective of the relationship or connection.

Since recently, he had been ailing from some undetected chronic illness. Despite the full attendance, medical care and undeterred, undaunted attention showered on him by his beloved wife, children, closest relatives and others closely associated with him, his precious life could not be salvaged. He had to succumb to his illness on 29.12.2019 unexpectedly and to a great shock and



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

disappointment for one and all keenly interested in his recovery.

As the space provided in this epitaph would not permit long narration. I prefer to wind up my appreciation of the great soul who has departed us. On this auspicious and memorable occasion. I humbly feel it's but appropriate that we too take to heart to emulate his exemplified qualities and behavioural patterns.

On this 31st ceremony of his demise let's all share in the griefs and bereavement of his beloved spouse, his children his closest relatives and his sincerest associates and pray that his dear soul rest in eternal peace and tranquility at the foot of our ALMIGHTY.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீர்மிகு அதிபர் திரு. S.S.செல்லத்துரை காலத்தில் எங்கள் உடுப்பிட்டி அ.மி. கல்லூரி

**க. சண்முகசுந்தரம்**
*முன்னாள் தாய்சங்கத் தலைவர்*

அகலித்த அனுபவங்களின் தொகுப்பான ஆழ்மன உள் நீரோட்டத்தின் ஞாபக நுரைகளை, காலங்கள் பல கடந்தேறிய நிலையில் நினைவு வெளிச்சத்தின் துணைகொண்டு மீட்டெடுக் கின்றேன். யாழ். உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி வரலாற்றில் திரு. S.S.செல்லத்துரை அவர்களின் காலம் பசுமை தீற்றிய வசீகரமான தருணங்கள் பொதிந்த பொற்காலமாகும். அவர் காலத்தில் நேர்த்தியோடும் கம்பீரத்தோடும் கல்லூரி செதுக்கிய சகாப்த சாதனைகளை ஜீவிதத் தன்மையோடு பதிவு செய்வதில் மன நிறைவெய்துகிறேன்.

**கல்விநிலை :**

1958 இல் இருந்து உ.அ.மி கல்லூரி தன் பயணத்தின் செல் நெறியினை திசைமாற்றிக் கொண்டதென்றே கருதவேண்டும். கல்லூரியில் கனதியான மாற்றங்கள் நிகழ்ந்தேறின. H.S.C (University Entrance) வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டன. H.S.C வகுப்புக்களுக்குக் கற்பிக்க இலங்கைப் பல்கலைக்கழகப் பட்டதாரிகளான கல்லூரி பழைய மாணவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டனர். அறிவியல் நோக்கிலான நுண் தரிசனத்தோடு ஆய்வு கூடங்கள் நிறுவப்பட்டன. கால்கோள் நிலைக் காலத்தில் பேரெடுப்பிலான வகுப்புகள் நடத்தப்படவில்லை. சிறியரக வகுப்புக்களே நிகழ்ந்தன. 1963 இல் முதலாவது மாணவி மருத்துவக் கல்லூரிக்குள் நுழைய, ஆற்றுப்படுத்தலுக்கு அமைவாக ஏனைய மாணவர்களும் மேதாவிலாசத்தை வெளிப்படுத்தி பொறியியல், விஞ்ஞான பிரிவுகளுக்குள் பாதம் பதித்தனர். 1964 இற்குப் பின் இலங்கைப் பல்கலைக்கழகம் புகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்கள் தொகை மேம்பட்டது. அச்சுவேலி, துன்னாலை, கொற்றாவத்தை போன்ற பல தூர இடங்களிலிருந்தும் மாணவர்கள் கல்லூரி நோக்கி விரைந்தனர். வீரியமான பரீட்சைப் பெறுபேறுகளின் விளைச்சலை அவதானிக்க முடிந்தது. அக்காலத்தில் முதன்மை நிலைப் பெறுபேறுகளோடு பட்டொளி வீசிப் பிரகாசித்த ஹாட்லிக் கல்லூரிக்கு ஈடுகொடுக்கும் வகையில் எமது கல்லூரியின் அறுவடையும் அமைந்தமை குறிக்கத்தக்கது.

**விளையாட்டு :**

விளையாட்டுத் துறையின் வளர்ச்சி இறும்பூது எய்தும் வகையிலே காணப்பட்டது. *VTA, JSSA* சங்கங்களினால் வருடந் தோறும் நடத்தப்பட்ட போட்டிகளில் எமது மாணவர்கள் பரிசில் களைக் குவித்தனர். மெய்வல்லுனர் போட்டிகள், உதைபந்தாட்ட போட்டிகள் போன்றவற்றில் கலந்துகொண்டு பன்முக வெற்றி களை வசப்படுத்தினர். *Orel Display* இல் வடமராட்சிப் பிரதேசத்தில் ஒவ்வொரு வருடமும், யாழ் மாவட்டத்தில் பெரும்பான்மை முறையும் தேசிய ரீதியில் இரு தருணத்திலும் வாகை சூடினர். அக்காலத்தில் விளையாட்டுத் துறையைச் சார்ந்த ஆசிரியர்கள், பழக்குவதிலும் பயிற்சி நல்குவதிலும் தன்னிகரற்றவர்களாகக் காணப்பட்டனர். மாவட்ட ரீதியில் நிகழும் போட்டிகளுக்கு நடுவர்களாக அங்கம் வகிக்க அழைக்கப்படுமளவிற்கு ஆளுமை மிக்கவர்கள். எனவே விளையாட்டுத் துறையும் அபரிதமான வளர்ச்சியினை அடைந்தது.

**சாரணியம் :**

எமது கல்லூரியின் சாரணிய வகிபாகம் விதந்து குறிப்பிடத் தக்கதாகும். ஒவ்வொரு வருடமும் பழைய பூங்காவில் நிகழும் சாரணிய *Rally* இல் முதலிடத்தைத் தக்கவைத்துக் கொண்டமை சலிக்காத சாதனைச் சரித்திரமாகும். இக்காலத்தில் *Scout Island Merit Flag* எமது கல்லூரிக்கு இருமுறை கிடைத்தது. செல்வச் சந்நிதி ஆலயம், வல்லிபுரக் கோவில் என்பவற்றில் உற்சவ கால



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுங்கு நியமங்களைத் திறமையாகக் கையாண்டு உச்சமான கீர்த்தியினைப் பெற்றனர். சாரண மாணவர்கள் உயர் தகைமையினை தகவமைத்துக் கொண்டவர்களாக அமைந்திருந்தனர். சாரணியத்திற்குப் பொறுப்பாக இருந்த ஆசிரியர்கள் நுவரெலியா பயிற்சிப் பாசறையில் பயிற்றப்பட்டவர்கள் என்பதும் குறிப்பிடத் தக்கது.

**விஞ்ஞானத்துறை :**

அறிவியலுக்கான அர்த்த பரிமாணத்துடன் விஞ்ஞானக் கற்கைநெறி இக்காலத்தில் முன்னெடுக்கப்பட்டது. 1962 இலிருந்த 1971 வரை தொண்டமனாறு நீரேரியில் நீர் உயிரியல் ஆராய்ச்சி TSSTA இனால் நிகழ்த்தப்பட்டது. தொண்டைமானாறு பாலம், வல்லைப் பாலம், சாவகச்சேரி வீதி சார்ந்த நீரேரி ஆகிய மூன்று இடங்களில் ஆய்வு நிகழ்த்தப்பட்டது. இரு முறை (ஆனி, கார்த்திகை) அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டன. ஒரு முழுமை யான நாளில் ஒரு மணித்தியாலத்திற்கு ஒரு தடவை அளவீடுகள் எடுக்கப்பட்டு, நீரில் நிகழும் மாற்றங்கள், உயிரிகளில் நிகழும் மாற்றங்கள் என்பன பௌதிக, உயிரிகளில், இரசாயன புலங் களுக்கமைய மேற்கொள்ளப்பட்டன. வல்லைப் பால சூழல் ஆராய்ச்சியின்ன எமது கல்லூரியே பொறுப்பேற்று நிகழ்த்தியது. நீர் உயிரியல் ஆராய்ச்சியில் சேகரிக்கப்படும் அளவீடுகளைப் பதிவதற்கு உகந்த அட்டவணைகளை வழங்குவதற்கு, இரசாயன ஆய்வுகளுக்குத் தேவைப்படும் சோதனைகளுக்குரிய கரைசல் களை வழங்குவதிற்கும் எமது கல்லூரியே பொறுப்பாக இருந்தது. HSC விஞ்ஞான மாணவர்களுக்கு இது போன்ற வெளிக்களப் பயிற்சி ஆய்வு அனுபவம் வேறெந்தக் காலத்திலும் கிடைத்திருக்க முடியாது.

எமது கல்லூரி மாணவர்கள் JSSTA இனால் தொண்டைமானாற்றில் நிறுவப்பட்ட வெளிக்கள நிலையத்திற்கு (FWC) வருடத்தில் குறைந்தது ஒரு தடவையேனும் சென்று ஆய்வுகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொண்டனர். நீர் உயிரியல் ஆராய்ச்சி (HBS), வெளிக்கள நிலையத்தில் மேற்கொண்ட ஆய்வு அளவீடுகள், தரவுகள் தொகுக்கப்பட்டு CAAS இல் கருத்துரை ஆசிரியர்களினால் வழங்கப்பட்டன. விஞ்ஞான ஆசிரியர்கள் மேதமை செறிந்த வித்தகர்களாக விளங்கியதுடன் சமய விருப்போடும், தியாக உணர்வோடும் சேவையாற்றினர். நேரம், காலம், பொருளாதாரச் செலவு என்பன குறித்துக் கவலையின்றி மாணவரின் உயர்வினைக் குறிக்கோளாகக் கொண்டு அனைத்துச் செயல் ஒழுங்கிலும் பங்கேற்றனர்.

**விஞ்ஞானப் பொருட்காட்சி :**

அறிவியல் குறித்த நுண்தரிசனத்தோடு கல்விச் சமூகம் செயலாற்றிய இக்காலத்தில் யாழ் மாவட்ட விஞ்ஞான ஆசிரியர் சங்கமானது இரண்டு வருடத்திற்கு ஒருமுறையேனும் விஞ்ஞானக் கண்காட்சியினை ஒழுங்குபடுத்தத் தவறுவதில்லை. கல்லூரிகளுக்கிடையே போட்டி ரீதியில் நிகழும் இக் கண்காட்சியில் ஒவ்வொரு வருடமும் தற்புதுமையான ஆக்கங் களைக் காட்சிப்படுத்தி எண்ணற்ற பரிசுகளைக் குவித்தமை இன்றும் பசுமைபோர்த்த நினைவாக ஞாபக இடுக்கில் மின்னு கின்றது. எமது கல்லூரி மாணவர்களும் திரு. S.S.செல்லத்துரை அவர்களின் காலத்தில் எங்கள் கல்லூரியிலேயே இரு தடவை விஞ்ஞானப் பொருட்காட்சியினை நடத்தி வியக்கவைத்தனர்.

**கலைத்துறை :**

தனித்துவமான விம்பங்களைத் தக்கவைத்துக் கொண் டுள்ள நாடக அளிக்கைகள், நடன நிகழ்வுகள், சங்கீத இசை அரங்குகள் ஒழுங்கு குவித்த கலை நிகழ்ச்சிகளை மையப் படுத்திய போட்டிகளிலும் எமது மாணவர்கள் காட்டிய திறமை சாமான்யமானதல்ல. மகிழ்நெறிக் கலைகளிலும் வாத்சல்யம் கொண்டு கலந்து ஏற்றமிகு பரிசுகளை ஈட்டியுள்ளனர். வருடந் தோறும் நிகழும் பெற்றார் தின விழாக்களிலும் கலை நிகழ்வுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்புற நடைபெறும். அலாதியான கலைஞானம் சுவறிய ஆசிரியர் குழாமே கலை நிகழ்வுகளுக்குப் பொறுப்பாக இருந்தது.

**ஆளுமைமிகு நிர்வாகம் :**

*1961* இல் எமது கல்லூரியை அரசாங்கம் பொறுப்பேற்று இருந்தாலும் திரு.*S.S.*செல்லத்துரை அவர்கள் கல்லூரியை மிகவும் கட்டுக்கோப்புடன் வழிநடத்தினார். அனைத்து ஆசிரியர் களுடனும் அன்பாக பழகினார். நுண்மதியோடு பகிடியாகவும் அறிவுரை வழங்கினார். ஆசிரியர்களுக்கிடையே மன முரண்பாடு நிகழாத வகையில் நிர்வாகத்தினை முகாமைத்துவம் செய்தார். அவரது காலத்தில் அதிகளவான திறமை வாய்ந்த மாணவர்கள் கல்வி பயின்றனர்.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அனைத்துத் துறைகளிலும் பாராட்டுக்களையும் பரிசுகளையும் பெற்றது. அவர் காலத்தில் கற்பித்த ஆசிரியர்களுக்கு சமூக மட்டத்தில் தனிப்பெரும் மதிப்பு நிலவியது. திரு. *S.S.*செல்லத்துரை அவர்களின் காலம் தனியார் கல்வி நிறுவனங்களின் மேலாதிக்க நிழல் கல்லூரிகளில் விழாத மேன்மைமிகு காலமாகும். எந்நேரத் திலும் மாணவர்களைக் கல்லூரிக்கு வரவழைத்து பயிற்சிகளை வழங்கக்கூடிய வாய்ப்புகள் இருந்தன. உண்மையிலேயே திரு. *S.S.*செல்லத்துரை அவர்கள் அதிபராக இருந்த காலம் உ.அ.மி. கல்லூரி வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய கீர்த்திமிகு காலம் என்று கூறினால் மிகையாகாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருங்காலத்திற்கான சக்தி வழங்கும் முதல்கள்

மனித நாகரீகங்கள், மனித வாழ்க்கைத் தரங்கள் முன்னேற்றமடைவதற்கும், அவற்றைக் குறையவிடாது பேணு வதற்கும் சக்தி வழங்கும் முதல்கள் *(Sources of energy)* தொடர்ச்சியாகக் குறைவடையாமல் இருப்பது அவசியமாகும். போதிய அளவிற்குச் சக்தியைப் பயன்படுத்துவதனாலேயே நாகரீகம் இப்போதய வளர்ச்சியடைந்த நிலையில் இருக்கின்றது. நாகரீகம் வளர்ச்சியடைவதற்கு முக்கிய காரணியாக இருந்தது கைத்தொழில் புரட்சியாகும்.

கைத்தொழில் புரட்சி ஏற்படும்வரை மனிதனதும் விலங்கு களினதும் வேலைகள், காற்றையும் நீரையும் கட்டுப்படுத்தி உபயோகத்திற்குக் கொண்டு வருதல் ஆகியன நாகரீகத்திற் குரிய பிரதான சக்தி வழங்கல்களாக இருந்தன. கைத்தொழில் புரட்சி விருத்தியடைவதற்கு முக்கிய காரணியாக இருந்தது நிலக்கரியும், பெற்றோலிய எண்ணெய்களுமாகிய சுவட்டு எரிபொருட்களாகும். ஆரம்ப காலத்தில் வீடுகளிலும் கைத் தொழில்களிலும் நிலக்கரிதான் வெப்பத்திற்கும் வலுவிற்கும் பயன்படுத்தப்பட்டது. ஆரம்பத்தில் மிகக் குறைவாக இருந்த நிலக்கரியின் பயன்பாடு, கைத்தொழில் புரட்சியின் உத்வேகம் முனைப்படைந்தபோது விரைவாக அதிகரித்தது.

இருபதாம் ஆண்டின் முற்பகுதியிலேயே பெற்றோலிய எண்ணெய் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தத் தொடங்கியது. புதிய புதிய கண்டுபிடிப்புகள் மிக விரைவாகப் பெருகின. எண்ணெய் மிக அதிக அளவில் மலிவாகக் கிடைத்தது. இந்த எண்ணெய் இல்லாதிருந்திருப்பின் அகத்தகன இயந்திரம் ஒருபோதும் கிடைத்திருக்க முடியாது. மேலும் நிலம், நீர், வான் போக்கு வரத்துக்களில் ஒருபோதும் புரட்சியும் ஏற்பட்டிருக்க மாட்டாது. பல கைத்தொழில்களுக்கும், வீட்டுத்தேவைகளுக்கும் எண்ணெய் தான் மிக வசதியான எரிபொருளாக வந்தது. பல சேதன இரசாயனப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதார்த்தங்களின் கைத்தொழில் தயாரிப்புகளுக்குரிய அடிப்படைப் பதனிடப்படாத பதார்த்தமாகவும் அது அமைந்தது. ஆதலினால் அதன் நுகர்வு எல்லையை மீறி உயர்ந்து சென்றது. 1960ஆம் ஆண்டளவில் அனேக கைத்தொழில் நாடுகளில் மிக முக்கியமான சக்தியின் மூலப்பொருளாக எண்ணெய் நிலக்கரியின் பாவனையை ஏறக்குறைய முற்றாக நீக்கிவிட்டது. பத்து வருடங்களின் பின் புதிய எண்ணெய்க் கிணறுகள் கண்டு பிடிக்கப்படுவதைவிட எண்ணெயின் நுகர்வு வீதம் மிக அதிகளவாக இருக்கக் காணப்பட்டது. வருங்கால சக்தியின் தேவை தொடர்ந்து இவ்வாறு இருக்கமாட்டாது என்பதற்கான முதலாவது அபாய அறிவிப்பாக இது இருந்தது. பூமியின் கீழ்ப் பகுதியில் ஒரு குறித்தளவு எண்ணெய் தான் இருக்கின்றது. 1970ம் ஆண்டு வரை 15% நுகரப்பட்ட எண்ணெய் அடுத்து பத்து ஆண்டுகளில் மேலும் 15% நுகரப்பட்டது. இப்போது அதன் நுகர்வு வீதம் மேலும் அதிகரித்துள்ளது. 2050ம் ஆண்டிற்கு முன் எண்ணெய்க் கிணறுகளிலிருந்து எண்ணெய் வழங்கல் நின்று விடும் என மதிப்பிட்டிருக்கிறார்கள்.

நிலக்கரியின் நிலை இந்த அளவிற்கு மோசமானதாக இல்லை. ஏனெனில் நுகர்வின் அளவு மிகக் குறைவு. மற்றது எண்ணெயின் அளவைவிட அது ஏறக்குறைய இருபது மடங்கு கூடியதாய் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. எப்படியிருந்தாலும் 2500ம் ஆண்டளவில் 80% நிலக்கரி நுகரப்பட்டு விடும் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஆதலினால் எமக்குக் கிடைக்கக்கூடிய இச்சக்தி வழங்கல் முதல்களை இப்பவேனும் பாதுகாக்கத் தொடங்குவது இன்றியமையாததாகும். எமது சிந்தனையில்லாத மேலதிக நுகர்வுகளுக்குப் பதிலாக, புத்திசாலித்தனமான எரிபொருட்களின் பாவனைக்கு நாம் நமது எண்ணங்களைத் திருப்புதல் அவசியமாகின்றது. அர்த்தமற்ற, அனாவசியமான, சக்தி வீணாக்கல்களை நாம் தவிர்க்க முயலவேண்டும். அதில் ஒன்று - வீடுகளில், காரியாலயங்களில், பாடசாலைகளில், தொழிற்சாலைகளில் மேலதிக மின்பாவனை களும், மேலதிக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெப்பமேற்றல்களும் கையாளப்படுகின்றது. உதாரணமாகக் கைத்தொழில் வளர்ச்சியடைந்த குளிர் நாடுகளில் கட்டிடங்களை வெப்பமாக்குவதற்கு அதிகளவு சக்தி பயன்படுத்தப்படுகின்றது. வீடுகளைத் தகுந்த முறையில் காவலிடுவதன் மூலமும், வீட்டினுள் அதிக சொகுசைத் தரும் வழமையான வெப்பநிலையை விட, தாங்கக்கூடிய சிறிதளவு குறைந்த வெப்பநிலையை, பக்குவமடைந்த மனத்துடன் அதை ஏற்றுக்கொண்டு கையாளுவதன் மூலமும் பயன்படுத்தும் சக்தியின் அளவை ஏறக்குறைய 20% இனால் குறைக்கக் கூடியதாய் இருக்கும் எனக் காட்டப்பட்டுள்ளது.

மேலும் மிக அதிகளவு வீணான எரிபொருள் பாவனையாளர்களில் மிக முக்கியமான ஒன்று தனியார் வாகனங்கள் போன்றவையாகும். இவ்வாகனங்களில் 10-20% வரையிலான எரிபொருள் மாத்திரம் வாகனத்தை இயக்குவதற்குப் பயன் படுத்தப்படுகின்றது. மின்சக்தியினால் வாகனம் இயக்கப்படும் போது சக்தியின் வீண்விரயம் குறைவாக இருக்கும். வருங் காலத்தில் இவ்வாகனங்களிலிருக்கும் குறைந்த வினைத்திறன் உடைய அகத்தகன இயந்திரங்களை மின்கலங்கள் ஒதுக்கித் தள்ளும் என நாம் நம்பலாம்.

கைத்தொழில்களில் மின்சக்தி பிறப்பித்தலில், வீடுகளை வெப்பமேற்றலில், வாகனங்களை இயக்குவதில், விலைமதிக்க முடியாத எண்ணெய், எதிர்பார்க்க முடியாத அளவிற்கு வீண் விரயம் செய்யப்படுகின்றது. இத்தேவைகளுக்கு எண்ணெயின் பெறுமதி மிகவும் கூடியதாக உள்ளது.

ஏனெனில் மனிதனுக்குத் தற்சமயம் அவசியம் தேவைப் படும் மருந்து வகைகள், கிருமிநாசினிகள், சாயப் பொருட்கள், செயற்கை நார்கள், பிளாஸ்டிக் பொருட்கள் போன்றவற்றைத் தயாரிப்பதற்கு எண்ணெயை ஒரு வழங்கும் முதலாகக் கட்டாயம் பாதுகாக்க வேண்டிய தேவையும் ஏற்பட்டுள்ளது. மின்னை உருவாக்குவதற்கு நிலக்கரியும் பயன்படுத்தலாம். ஆதலினால் மின்பிறப்பாக்கலுக்கு எண்ணெய்க்குப் பதிலாக நிலக்கரியைப் பயன்படுத்தல் ஒரு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருத்தமான சிந்தனையாகும். ஆனால் கூடிக்கொண்டு வந்த மின்சக்திக்கான கிராக்கி, அணுஉலை களினால் மின் உருவாக்கலை வேண்டுகின்றது. எண்ணெயி லிருந்து மின் உருவாக்கலைவிட, அணு உலைகளினால் மின் உருவாக்கல் மலிவாக இருக்கின்றது. வளர்ச்சியடைந்த கைத் தொழில் நாடுகளில் அணு உலைகளிலிருந்தே 50% இலும் கூடிய அளவு மின்சக்தி பெற்றுக்கொள்கிறார்கள். சுவட்டு எரிபொருட் களும் அணுச் சக்திக்கான யுரேனிய தாதுப்பொருட்களும் வரையறுக்கப்பட்ட முதலீட்டு மூலவளங்களாகும். இவை விரை வாகக் குறைந்துகொண்டு போகும் சக்தி வழங்கும் முதல் களாகும். இந்தக் குறைந்துகொண்டு போகும் பிரச்சினைக்கு இப்போது நாம் முகம்கொடுக்க வேண்டியுள்ளோம். இதற்காக வருங்காலச் சக்தி வழங்களுக்கான பல்வேறு வகையான சாத்தியக்கூறுகள் சிந்திக்கப்பட்டுள்ளன.

நீர் மின்னிலையங்களினால் உருவாக்கப்படும் மின்சக்தி யின் அளவு இவ்வுலகத்தில் 1% ஆகவே இருக்கின்றது. பல இடங்களில் இவ்வாறு மின் உருவாக்கலை அதிகரிக்கக் கூடிய வாய்ப்புகள் உண்டு. நீர் மின் உருவாக்கம் பிரதானமாக அது இருக்கும் இடத்துக்குரியதாகவே இருக்கும். உகந்த எல்லா இடங்களிலும் இதை விருத்தி செய்வதன் மூலம் நீர் மின் உருவாக்கத்தை இருமடங்கு அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப் படுகிறது.

கடலில் ஏற்படும் உயர்தலும், வற்றலும் அதிகளவு சக்தியைக் கொண்டுள்ளது. தாழ்கதியுடைய மின் பிறப்பாக்கி களைப் பயன்படுத்தி இச்சக்தியையும் மின்சக்தியாக மாற்றலாம். ஆனால் இது ஒரு சிறந்த சக்தி முதலாக இருக்காது எனக் கருதுகிறார்கள்.

சூரியனிலிருந்து நேரடியாகப் பெறப்படும் கதிர்வீசல்தான் எங்களுக்குக் கிடைக்கக்கூடிய, வற்றாத, மிகப்பெரிய சக்தி வழங்கல் முதலாகும். அரிசோனா பாலைவனத்தில் விழும் சூரியசக்தியின் ஏறக்குறைய 1/10 பங்கு, முழு ஐக்கிய அமெரிக்காவுக்குமான சக்தியை வழங்கப் போதுமானதாகும் என விஞ்ஞானிகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணித்திருக்கிறார்கள். இருந்தும் சூரியக் கலங்களின் விலை மிக உயர்வாக இருப்பதனால் சூரியக் கதிர்வீசலை நேரடியாகப் பயன்படுத்திச் சக்திபெறுதல் மிகக் குறைவாகவே இப்போது உள்ளது. சூரிய சக்தியை ஒரு தகுந்த சக்தி முதலாக மாற்றுவதற்கான, ஒரு உகந்த, மலிவான முறை ஒன்றை வளர்ச்சிக்குட்பட்ட தொழில்நுட்பம் இதுவரை வழங்க முடியவில்லை.

ஏனைய எரிபொருட்களைவிட ஒரு அலகுத் திணிவுக்கு அதிகளவு கூடிய வெப்பத்தை, ஐதரசன் வாயு கொடுக்கின்றது. வருங்காலத்தில் ஐதரசன் ஒரு எரிபொருளாக, கூடிய பங்கெடுக் கும் சாத்தியக்கூறுகள் அதிக அளவிற்குக் காணப்படுகின்றது. அதாவது வாயு நிலையில், இந்த நூற்றாண்டிற்கான, விருப்பத்திற் குரிய எரிபொருளாக இருக்கக்கூடும். இது எரியும்போது நீர் மாத்திரம் விளைவாகப் பெறப்படும். இது சூழலை மாசுபடுத்தாது. ஆனால் இப்போது அதிகளவு பயன்பாட்டிலுள்ள சுவட்டு எரிபொருட்களினாலும் அணு உலைக் கழிவுகளினாலும் எமது சூழல் அதிகளவு மாசடைதலுக்குட்பட்டுக் கொண்டிருக்கிறது.

ஐதரசன் எரியக் கூடிய வீதத்தில் தானியங்கு ஊர்திகளின் இயந்திரங்கள் மாற்றியமைக்கக் கூடியதாக வரலாம். இப்போது மாதிரி வாகனங்கள் தயாரிக்கப்பட்டு பரீட்சார்த்த நிலையில் உள்ளன. ஆனால் இதிலுள்ள முக்கிய பிரச்சினை என்ன வெனில் எண்ணெயைப் போல் இது ஒரு ஆரம்ப சக்தி முதல் அல்ல. மற்றய சக்தி முதல்களைப் பயன்படுத்தியே இதைப் பெறவேண்டியுள்ளது. இப்போது நிலக்கரியையும் நீரையும் அல்லது ஐதரோகாபனையும் நீரையும் பயன்படுத்தியே, ஐதரசன் பெறப்படுகிறது. அணு உலைகளிலிருந்து அல்லது சூரிய ஔிர் மின்கலங்களிலிருந்து பெறப்படும் மின் சக்தியைச் சக்தி முதலாகப் பயன்படுத்தி, மின்பகுப்பதன் மூலம் நீரிலிருந்து ஐதரசன் பெறப்படலாம். இப்போது தகுந்த ஔி இரசாயனத் தாக்கங்களின் மேல் சூரிய சக்தியை நேரடியாகப் பயன்படுத்தி நீரை ஐதரசனாகவும் ஒட்சிசனாகவும் மாற்றுவதற்கு ஆய்வுகள் நிகழ்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருக்கின்றன. அத்துடன் பச்சைத் தாவரங்கள் சூரிய சக்தியைப் பயன்படுத்தும் அளவை விடக்கூடிய வினைத் திறனுடன் சூரிய சக்தியை இரசாயன சக்தியாக மாற்றுவதற்குச் சில வழிமுறைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இம்முறைகளைப் பயன்படுத்தியும் ஐதரசனை அதிக அளவிலும் மலிவாகவும் தயாரிக்கப்படுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படலாம். எனினும் போட்டியிடக்கூடிய விதத்தில் சூரிய சக்தியைப் பயன்படுத்தி மலிவாக ஐதரசனைத் தயாரித்தல், இப்போது நாம் எதிர்கொள்ள வேண்டிய பிரச்சனையாகவே இருக்கின்றது.

முடிவுறமாட்டாத சூரிய சக்தி அணுக்கரு உருகலின் மூலமே வருகின்றது. ஒரு ஐதரசன் குண்டு வெடிக்கும்போது எவ்வாறு சக்தி உருவாகின்றதோ, சரியாக அதுபோலவே சூரிய சக்தியும் உருவாகிறது. மிக மிக உயர்ந்த அமுக்கங்களிலும், மிக மிக உயர்ந்த வெப்பநிலைகளிலும் சடப்பொருட்கள் மோதுகைக் குட்படுவதனாலேயே கரு உருகல் நிகழ்கிறது. மிகச் சிறிய அணுக்களே கரு உருகலுக்குட்படக் கூடியதாய் இருக்கும். சூரிய சக்தியின் பெரும்பகுதி, பாரஐதரசன் அணுக்கள் (துத்தேரியம்) உருகலுக்குட்பட்டு ஈலியம் அணுக்கள் உருவாவதனாலேயே தோன்றுகின்றது. இந்த உருகல் முறையினால் சூரியனின் மேற்பரப்பிலிருந்து ஒரு வருடத்தில் காணப்படும் சூரிய சக்தி 250 மில்லியன் மில்லியன் மில்லியன் தொகைகளின் எண்ணெயின் சக்திக்குச் சமனாகும் எனக் கணித்திருக்கிறார்கள்.

இப்புவியின் மேற்பரப்பில் இத்தகைய உருகலினால் பெறப்படும் சக்தியைக் கட்டுப்படுத்தி உபயோகத்திற்குக் கொண்டுவர முடியுமானால் மாத்திரமே நாம் எப்போதைக்குமான எமது சக்திப் பிரச்சினையைத் தீர்த்து விட்டதாகக் கருதக் கூடியதாய் இருக்கும். ஒரு தொன் கடல் நீரில் 34 பதுத்தேரியம் காணப்படுகிறது. இது 200 தொன் எண்ணெயினால் உருவாக்கப் படும் சக்திக்குச் சமமானது. இதிலுள்ள மற்றைய நன்மை என்னவென்றால் கரு உருகலின்போது உண்டாகும் விளைவுகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணு உலைகளில் உண்டாகும் விளைவுகளைப் போல் கதிர்த் தொழிற்பாடு உடையவையல்ல. ஆதலினால் சூழல் மாசடையும் வாய்ப்பே இல்லை. உண்மையில் இனி எப்போதாவது இத்தகைய கட்டுப்படுத்தி அடக்கி ஆளக்கூடிய கரு உருகல் முறை, சாத்தியமாகுமா என்பதை எதிர்வுகூற முடியாது. இதிலுள்ள முக்கிய பிரச்சனை என்னவெனில் கரு உருகலை நிகழ்த்துவதற்கு 120 மில்லியன் பாகை செல்சியஸ் வெப்பநிலை தேவை. அதாவது ஒரு அணுக்குண்டு வெடிக்கும்போது தோன்றும் வெப்பநிலையாகும். இதுவரை இத்தகைய உயர்த்தப் பட்ட வெப்பநிலைகள் அடையப்படாவிடினும் கரு உருகல் தாக்கங்களைத் தொடர்ந்து பேணக்கூடிய வெப்பநிலை களுக்குக் கிட்டிய வெப்பநிலைகள் பரிசோதனை ரீதியில் அடையப்பட்டுள்ளன. இதற்கான பூரணதாக நிபந்தனைகள் கிட்டிய காலங்களில் அடையமுடியும் என நினைக்க கூடியதாய் இருக்கின்றது.

அணுக்குண்டு வெடித்தலின்போது உண்டாகிய அதிகளவு சக்தியை அடக்கி ஆள்வதற்கு அணு உலைகள் உருவாகியது போல, ஐதரசன் குண்டு வெடித்தலின்போது உண்டாகும் அளப்பெரிய சக்தியை அடக்கி ஆள்வதற்கு மிக விரைவாக விருத்தியடைந்து வரும் தொழில்நுட்பம் கிட்டிய வருங்காலத்தி லேனும் ஒரு விடை பகருமா? என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

ஆதலினால்,

எல்லையில்லா சக்தியைக் கொண்டிருக்கக் கூடிய உலகம் இதுவரை ஒரு கனவாக இருப்பதனால், அதுவரை எங்களுடைய வரையறுக்கப்பட்ட சக்தி மூலங்களை கூடிய புத்திசாலித்தனத் துடனும், கூடிய வினைத்திறனுடனும் பயன்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் நாம் கற்றுக்கொள்ள இனியேனும் தெண்டிக்க வேண்டும்.

**சண்முகசுந்தரம் ஆசிரியர்**
(ஓய்வுநிலை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செஞ்சேவகன் சண்முகசுந்தரம் சேர்

இறையருள் ததும்ப அன்பு ஆதரவு பொலிந்த முகம் ஒன்று எம் கண்முன்னே தோன்றி மறைகின்றது. மனித வாழ்வு மேன்மையானது. நாம் ஒவ்வொருவரும் பல்லாயிரம் மனிதர்களை சந்திக்கின்றோம். எம்மை வழி நடத்தியவர்களை ஏனையோருக்கு அன்புடன் உதவிக்கரம் நீட்டியவர்களை இழக்கும் போது துவண்டு விடுகின்றோம். சண் சேர் அவர்களது பிரிவுத்துயர் ஆற்றமுடியாத பெருந்துயர் ஆகின்றது. சேர் அவரது பிரியமான துணைவி பவளம் அம்மையாரும் அன்னாரது பிள்ளைச் செல்வங்களும், குறிப்பாக இறுதிக்காலங்களில் தேவையானபோதெல்லாம் சேர் உடன் கூடவே இருந்து உறுதுணையாக ஆறுதலளித்த மகன் முகுந்தன் அவர்களும் சேர் இன் திருமுகத்தை எப்போது காண்போம் என்ற உணர்வு மேலோங்க கண்ணீரில் கரைந்து போகின்றனர். சேர் இன் மாணவர்களாகிய நாம் அந்த கருணை ஒளிவீசிய கண்களை காணத்துடிக்கின்றோம், எம்மையெல்லாம் வாஞ்சையுடன் வாரிக்கொண்ட கைகளை பற்றிக் கொள்ள முடியாதா என ஏங்குகின்றோம். குரு பாதுகாபத்தி மூலம் என்பார்கள். சேர் இன் தேசமளந்த கால்களை துதிக்கத் துடிக்கின்றோம். 'குரு வார்த்தை மந்திரமூலம்' என்பார்கள். கனிந்தமொழி உவந்த உதடுகள் ஏனோ மௌனித்தன.

இதிகாச புராணங்களில் உலகமகா இலக்கியங்களில் பல இலட்சணங்கள் பொருந்திய இலட்சிய புருஷர்களைக் காண்கின்றோம். அந்த இலட்சிய புருஷர்களால் அவர்கள் பிறந்ததேசம் பெருமையடைகின்றது. அத்தகையவர்கள் பல தசாப்த்தங்களுக்கு ஒருமுறை அவதரிக்கின்றார்கள். சண் சேர் இன் முகத்தின் காந்தி வசீகரமானது. அவருடைய உள்ளத்தின் ஒளி, வீரமும் தீரமும், ஒழுக்கமும் நடத்தையும், தியாகமும் பொதுநலச் சேவையும் மக்களின் இதயத்தில் ஏற்றி வைத்து போற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிசெய்கின்றன. சண் சேர் ஐ உவந்த வடமராட்சியின் கல்விப் பாரம்பரியத்தைப் பேணும் கரணவாய் பெருமையடைகின்றது.

அமரர் சண்முகசுந்தரம் சேர் அவர்கள் நல்லாசிரியராக மனிதநேயம் மிக்க பண்பாளராக வாழ்ந்தவர். இவரிடம் பயின்ற, பழகிய நாட்கள் பசுமையானதாக மனதில் நிறைந்துள்ளன. சேர் இடம் காணப்பட்ட அமைதியும், அடக்கமான ஆழமான அறிவும், அனுபவமும் மாணவர்களுக்கு சிறப்பான எதிர்காலத்தை வடிவமைக்க உதவின. மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக தம்மால் என்னென்ன வழிகளில் பணியாற்றவேண்டுமோ அவற்றையெல்லாம் மேற்கொண்டுதாம் கற்பித்த பாடசாலைகளில் தனது கல்விப் பணியினை செவ்வனே செய்த பெருந்தகை. தன்னிடம் கல்வி பயின்ற மாணவச்சமூதாயத்தில் பின் தங்கிய பிள்ளைகளிடத்தும், வசதி வாய்ப்புக்கள் போதியளவு இல்லாத மாணவர்களிடத்தே அதிக அக்கறையெடுத்தும் அவர்களின் கல்விச் செயற்பாடுகளுக்கும் உயர் அடைவுகளுக்கும் தம்மால் ஆன அனைத்து உதவிகளையும் வழங்கி, அவர்களை உயர்ச்சி அடையவைத்தார். கற்பித்தல் பணிகளை திட்டமிட்டு, திட்டமிட்டவாறு நிறைவேற்றுவார். பாடசாலையின் மேலதிகப் பணிகள் : விளையாட்டு, சாரணியம், புத்தாக்கம் போன்றவற்றை மகிழ்வுடன் ஏற்றுபொறுப்புடன் நிறைவேற்றுவார். சக ஆசிரியர்களுடன் நேர்மையாகவும் மகிழ்வுடனும் பழகும் பண்பினர். சிறந்த விளையாட்டு வீரர். உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலை சிறந்த விளையாட்டு வீரர்களை உருவாக்கி வரும் கலாச்சாரத்தின் தோற்றுவாயாக அமைந்தவர். உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் தலைவராக பலஆண்டுகள் பணிபுரிந்து பாடசாலையை வளப்படுத்தியவர். வெளிநாட்டில் வாழும் தனது மாணவர்களின் பங்களிப்புடன் பழையமாணவர் சங்கத்தில் பெரும் நிதியை நிரந்தரவைப்பிலிட்டு அச்சங்கத்தின் காத்திரமான பங்களிப்பிற்கு வித்திட்டவர். அவர் சுத்தமான மனிதர். மனதுக்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வஞ்சம் வைக்காது நேராக சொல்லும் உயர்ந்த உள்ளம் கொண்ட பண்பாளர்.

சண் சேர், வாழ்க்கையில் பல இடர்களைச் சந்தித்தார். மறவனாக போர்க்களத்தில் மடிந்த தனது அன்புக்குரிய அழகான மூத்தமகன் வீந்தனின் பிரிவுத்துயரால் துவண்டார். ஆனால் தனது கடமைகள் நிமித்தம் மீண்டும் எழுந்தார்; செயற்பட்டார். மகனின் மறைவினால் பலசவால்களைச் சந்தித்தபோதும் சளைக்காது இலட்சியத்துடன் தனது குடும்பப் பொறுப்புக்களைப் பேணி பிள்ளைகளுக்குப் பாதுகாப்பு அரணாக விருந்து அவர்களின் மேம்பாட்டிற்காக அயராது உழைத்தார்.

சண் சேர், தனது என்று மட்டுப்படுத்தாமல் உற்றார், உறவினர், ஊரார் என எல்லோருடனும் பெருமை கொள்ளாமல் மகிழ்வுடன் பழகி உதவி புரிந்து வந்தமை மறக்க முடியாத தொன்றாகின்றது. "உண்மை உயர்வு தரும்" என்ற கொள்கையுடன் நேர்மை மற்றும் நம்பிக்கைக்குரிய மனிதராகத் திகழ்ந்தார்.

சேர் செய்த பூர்விக புண்ணிய பலன் அவரிற்கு நல்ல மனைவியும் பிள்ளைகளும் வாய்த்தமையாகும். மிகுந்த விட்டுக்கொடுப்புடனும் புரிந்துணர்வுடனும் இனிமையாக கூடி வாழ்ந்த குடும்பம். சுகதேகியான சண் சேர், இறுதிக் காலத்தில் நோயாளி எனும் பெயர் பூண்டார். கையும் மருந்தும் ஆனார். சேர் இன் குணநலத்தால் ஈர்க்கப்பட்டுமனமுவந்து கரம் பற்றிய பவளம் அம்மையாரின் பரிவான சேவை அவரின் வலிகளை தகர்த்தது. மேலும் நோய் வீரியம் பெற்றவேளைகளில் மகன் முகுந்தன் கனடாவிலிருந்து ஓடோடி வந்து நீண்டகாலம் இங்கு தங்கியிருந்து தகப்பனாரின் மிகவும் அத்தியாவசியமான தேவைகளையும், பௌதீக உதவிகளையும் உடனிருந்து நிறைவேற்றியமை ஆறுதலாக அமைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களின் ஒளிவிளக்காகவும், கல்விச் சமூகத்தின் செஞ்சேவகனானவும் தனது கடமைகளை ஆற்றிநிறைவுடன் வாழ்ந்த சண்சேர்,

"பாயில் கிடவாமல், நொந்துமனம் வாடாமல், சீலம் இல்லாதகசடருடன் கூடிப் பாசாங்கு பேசி மதியிழந்து கெடாமல், பிணவாசம் உற்ற பெருங்காயம் மெய்யென்று பண ஆசையாலே மதி இழந்து கெடாமல், பரமனடிசேர்ந்தார்"

எல்லாம் புகழும் இறைவனுக்கே

ஓம் சாந்திஓம் சாந்திஓம் சாந்தி

*பேராசிரியர்.சி. சிறிசற்குணராசா*
*கணிதப் பேராசிரியர், யாழ். பல்கலைக்கழகம்,*
*தலைவர், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி,*
*பழைய மாணவர் சங்கம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவளி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

தானுருகி இருள் அகற்றிய ஞானதேசிகன் என்னும் மகிமைமிகு மனிதரான எங்கள் குடும்ப விளக்கு இயற்கை நியதிக்கமைய அணைந்த தருணத்திலே, நேரிலே வருகை தந்தும், தொலைபேசி ஊடாகவும், இணைய ஊடகங்கள் மூலமாகவும் அனுதாபங்களையும், ஆறுதல் மொழிகளையும் வெளிப்படுத்திய அன்புள்ளங்கள் அனைத்திற்கும் நன்றி நவில்கின்றோம். மேலும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள், பதாகைகள், மலர் வளையங்கள் ஊடாக துன்பியலைப் பகிர்ந்த பாசமிகு உறவுகளுக்கும் எங்கள் குடும்பத்தின் சார்பிலே நன்றியினைத் தெரிவிக்கின்றோம்.

இறுதிக் கிரியையின்போது, இரங்கல் உரையாற்றிய நீள் அனுபவப் பேரறிஞர்களுக்கும், இறுதிக்கிரியைகள் சிறப்புற நடந்தேற நெறிப்படுத்திய க. தர்மலிங்கம் (முன்னாள் முதல்வர் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி - முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர்), சி. அகிலதாஸ் (உரிமையாளர், நெல்லை சில்க் - முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர்) ஆகியோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகுக. மேலும் அமரரின் மேதாவிலாசத்தை, மீப்புலமையினை உளங் கொண்டு வெவ்வேறு புலங்களில் இரங்கல் நிகழ்வுகளை முன்னெடுத்த உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் *Swiss* கிளையினருக்கும், கொழும்புக் கிளையினருக்கும் பண்டிதர் சு. முரளிதரன் அவர்களுக்கும் நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகள். அன்னாரின் இறுதிப் பயணத்திலே பங்கெடுத்து பன்முக நெறிகளில் உதவிபுரிந்த உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**- குடும்பத்தினர் -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்று வருகின்றேன்



என் மாணவச் செல்வங்களே
உறவுகளே! பிள்ளைகளே!
எல்லோரிடமும் இருந்து
விடை பெறுகின்றேன்

இந்த மண்ணில்
மகனாக
நல்லதொரு கணவனாக
நல்ல தந்தையாக
நல்லதொரு சகோதரமாக
நல்லதொரு தாத்தாவாக
நல்லதொரு ஆசிரியனாக
என் பயணம் தொடர்ந்தது

என் பயணம்
முடிந்து விட்டது
உங்களிடம் இருந்து
விடைபெறப்போகின்றேன்
இங்கு வந்த
என் தேவைகள்
முற்றுப் பெற்று விட்டன

என் கதைக்கு
முடிவுரை
எழுதி விட்டேன்
இந்த மண்ணிலே
நல்ல பிள்ளைகளை
நல்லதோர்
மாணவ சமூகத்தை
உருவாக்கிய திருப்தியுடன்
நிம்மதியாக
சென்று வருகின்றேன்

என் பால்
அன்பு கொண்ட பிள்ளைகள்
மனைவி
பேரக்குழந்தைகள்
மாணவச் செல்வங்களை
விட்டுச் செல்கின்ற
ஒரு கவலையைத் தவிர
வேறெந்தக் கவலையும் எனக்கில்லை

யாத்திரிகர்களாக வந்தோம்
யாத்திரை முடிந்தது
செல்லும் நேரமும்
வந்து விட்டது

என் செல்வங்களே
என் நினைவுகளை
உங்களிடம் தந்து விட்டு
உங்கள் நினைவுகளோடு
சென்று வருகின்றேன்

என்னை
விடை தந்து அனுப்பி வையுங்கள்
இந்த மண்ணில்
எனக்காக
நீங்கள் செய்த எல்லாவற்றிற்கும்
நன்றிகள்
சென்று வருகின்றேன்

*என்றும் அன்புடன்*
*உங்கள் சண் ஆசிரியர்*

ஆக்கம்: கர்ணன் சின்னதம்பி

தமிழ்ப்பூங்கா, நெல்லியடி. 0212264014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org